மாலை: 50 மணி: 8 ஆகஸ்ட் 2008 விலை ரூ. 10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு

## அருள்மிகு செங்கமலவல்லி உடனாய அருள்மிகு ஆமருவியப்பன், தேரழுந்தூர்



கயிலையே மயிலை!
தென்னாடுடைய சிவனே போற்றி!

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மயிலையே கயிலை!!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!



# பன்னிரு திருமுறை விழா - சேக்கிழார் விழா அழைப்பிதழ் 2008



அன்புடையீர், வணக்கம்

ஏழிசைப் பயன் கண்ட திருமயிலை கபாலீச்சரத்தில் திருமுறை மண்டபத்தில், தினசரி மாலை 5.30 மணி முதல் திருமுறை விண்ணப்பமும், இரவு 7.00 மணிமுதல் சொற்பொழிவும் பின்வரும் நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறும். இதைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். அன்பர்கள் வருகை தந்து, செவிச் செல்வமும் திருவருட் செல்வமும் பெற வேண்டுகிறோம்.

நேரம்: தினசரி மாலை 5.30 மணி முதல் இரவு 9.00 மணிவரை  இடம்: திருமுறை மண்டபம்

5.8.2008 அன்று காலை 9.00 மணிமுதல் அடியார் பெருமக்கள் பங்குபெறும் திருவாசக முற்றோதல் நடைபெறும்

| நாள்: | கிழமை | தலைமையுரை | சிறப்புரை |
|---|---|---|---|
| 6.8.2008 | புதன் | முனைவர் திரு. அவ்வை து.நடராசன் அவர்கள் | பொற்கிழிக் கவிஞர் திரு. சொ.சொ.மீ. சுந்தரம்அவர்கள் |
| 7.8.2008 | வியாழன் | திரு. த. சுந்தரம் - இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை சென்னை. | முனைவர். திருமதி. இராம. சௌந்தரவல்லி அவர்கள் |
| 8.8.2008 | வெள்ளி | திரு. ஆத்மகணாநந்தர் சுவாமிஜி அவர்கள் | செந்தமிழ் அரசு திரு. கி. சிவக்குமார் அவர்கள் |
| 9.8.2008 | சனி | முனைவர் திரு. தமிழண்ணல் அவர்கள் | நாவுக்கரசர் முனைவர் திரு. சோ. சத்தியசீலன் அவர்கள் |
| 10.8.2008 | ஞாயிறு | திரு. இராமநாதன் பழனியப்பன் அவர்கள் | செந்தமிழ் வேள்விச் சதுரர் திரு. மு.பெ. சத்தியவேல் முருகனார் அவர்கள் |
| 11.8.2008 | திங்கள் | அருளாளர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் | புலவர். திரு. துரை. நமசிவாயம் அவர்கள் |
| 12.8.2008 | செவ்வாய் | முனைவர் திரு. இரா. நாகசாமி அவர்கள் | முனைவர் திரு. தெ. ஞானசுந்தரம் அவர்கள் |
| 13.8.2008 | புதன் | நயவுரை நம்பி டாக்டர் திரு.எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் | தவத்திரு அன்னை. சகுந்தலா அவர்கள் |
| 14.8.2008 | வியாழன் | காஞ்சிபுரம் மெய்கண்டார் பீடம், தொண்டை மண்டல ஆதீன 232வது குருமகா சந்நிதானம். சீலத்திரு.. சீர்வளர்சீர் திருவம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் | மகாவித்துவான் திரு. வே.சிவசுப்பிரமணியன் அவர்கள் |
| 15.8.2008 | வெள்ளி | தவத்திரு முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்அவர்கள் | முனைவர் திரு. அரங்க இராமலிங்கம் அவர்கள் |
| 16.8.2008 | சனி | தவத்திரு. ஊரன் அடிகள் அவர்கள் | திரு. தா.கு. சுப்பிரமணியன் அவர்கள் |

17.8.2008 ஞாயிறு

நிறைவு விழா

(காலை 10.00 மணிமுதல் பகல் 12.30 வரை)

திரு. கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப., அவர்கள்

முனைவர். திருமதி சாரதா நம்பி ஆரூரன்
அவர்கள் மாநில தகவல் ஆணையர், தகவல் அறியும் ஆணையம்.
புலவர் திரு. மு. இராசரத்தினம் அவர்கள்

(மாலை 5.30 மணிமுதல் இரவு 9.00 வரை)

வரவேற்புரை

டாக்டர். திரு. நல்லி.என்.குப்புசாமி செட்டியார் அவர்கள், அறங்காவலர் குழுத்தலைவர்

முன்னிலை

திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள், சிறப்பு ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை,

அருளாசி வழங்குபவர்- குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்

தவத்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல அடிகளார் அவர்கள்

வாழ்த்துரை

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

## மாண்புமிகு திரு கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்

சிறப்புரை : பேராசிரியர் முனைவர் கலைமாமணி திரு.இரா. செல்வக்கணபதி அவர்கள் நன்றியுரை : திரு த. சுந்தரம் இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை -34

ம. தேசிவந்திரன் பி.எஸ்சி. பி.எல்., துணைஆணையர்/ நிர்வாக அதிகாரி.  டாக்டர் நல்லி என்.குப்புசாமி செட்டியார், அறங்காவலர்குழுத் தலைவர்

விஜயா தாயன்பன், பி.ஆர். தமிழரசன், பொழிச்சலூர் வைத்தியநாத முதலியார் அறங்காவலர்கள்



# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2039 - ஆவணி மாதம்
மாலை: 50 மணி 8 ஆகஸ்ட் 2008

பேரன்புடைப் பெருந்தகையீர்!
வணக்கம்.

**பூ**வணி அணிந்த மங்கையென ஆவணி மாதம் தோன்றுகின்றது. இம்மாதம் கண்ணன் அவதாரம் செய்த மாதமாகும். கண்ணன் பசுக்கள் மீது அன்பு கொண்டு அவற்றை மேய்த்துக்கோவலனாய் நின்றான். ஆக்கள் மருவி ஆமருவியப்பனாக, அவன் பிரம்மனுக்காக தேரழுந்தூரில் சேவை சாதித்தான். ஆமருவி நிற்கும் அவன் இராமனாக வில்லேந்தி காட்சியளிக்கும் அற்புதக் கோலமே அட்டையை அலங்கரிக்கின்றது.

இம்மாதம் மூல முழுமுதற்கடவுளான விநாயகப் பெருமான் அவதாரம் செய்த மாதமுமாகும் வடிவாலும், வரந்தருவதாலும் பெருமைபெற்று விளங்கும் ஈச்சனாரி விநாயகரின் அருட்காட்சியுடன் நமது இதழ் தொடங்குகிறது. தொடர்ந்து விநாயகப் பெருமானின் வரலாற்றை விளக்கிக் கூறும் தமிழ்க்காவியமான விநாயகபுராணம் அரங்கேற்றம் நடந்தேறிய சென்னை பிரசன்ன விநாயகர் ஆலயத்தை இந்த இதழில் காண்கிறோம்.

வடமதுரை மன்னனான கண்ணன், தென்மதுரையில் கொலுவீற்றிருக்கும் அழகைக் "கூடல் அழகர்" என்னும் திருத்தல உலா கட்டுரையில் காண்கிறோம். இக்கட்டுரை கண்ணன் தமிழ்ச் சங்கத்தில் "துவரைக்கோமான்" எனும் பெயரில் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்ததாகக் கூறுகிறது.

கண்ணனை மணவாளனாக எண்ணிய சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் ஆண்டாளின் ஐவகைத் திருமேனிகள் சிந்திக்கப்பட்டுள்ளன. கண்ணனை "நந்தனார் களிறு" என்பார் திருமங்கையாழ்வார். களிற்றின் (யானை) குணங்களை பகவானின் குணங்களோடு ஒப்பிட்டு மகிழ்கிறோம். அது "ஆனையும் அழகிய திருமாலும்" என்ற கட்டுரையாக மலர்ந்துள்ளது. மற்றோர் கட்டுரையில் ஆலயங்களுக்கும் ஆனைக்கும் உள்ள தொடர்புகளை சொல்லோவியமாகக் காண்கிறோம்.

கண்ணனைக் கண்ட கண்களால் அன்னை கோலவிழியாளைத் தரிசிக்கின்றோம். தொன்மயிலையின் காவல் தெய்வமான அவள் பெருமைகள் சொல்லுக் கடங்காதவைகளாகும். அன்னையை அடியொற்றி அழகு முருகனின் அருமை பெருமைகளை மூவர்போற்றும் முருகன் ஓவியத்தில் தீட்டுகிறார் சுசீந்தரம் கந்தசாமிப்பிள்ளை. நாடெங்கும் பயணித்து நல்ல செந்தமிழ் வளர்த்த சிவத்திருஞானியாரின் பெருமைகளை "செந்தமிழ் வளர்த்த சிவத்திருஞானியார்" என்னும் தலைப்பில் தமிழாகரர் தெ.முருகசாமி அவர்கள் விரித்துரைக்கின்றார்.

நாளும் நல்ல பயன்பெற்று நலமுடன் வாழும் வழிகளைக் கூறுவதாக திரு. வி.எஸ். மணியன் அவர்களின் "அன்றாட வாழ்க்கைக்கு ஆன்மிகம் காட்டும் வழிகள்" எனும் கட்டுரை வெளிவந்துள்ளது.

செம்மை சேர் வாழ்வை நடத்துபவர்களைத் தேடி இறைவன் தானே வந்து அருள்புரிவான் என்பதைப் பனையபுரம் அதியமானின் திருத்தினை நகர் கட்டுரையால் அறிகிறோம்.

இந்த இனிய நல்ல வேளையில் அன்பர்கள் அனைவரும் இறையருள் பெற்று இன்பமுடனும் அன்புடனும் வாழப் பிரார்த்திக்கின்றேன்.

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
சிறப்பு ஆணையர்



# குறளோவியம்

**பே**ரனைப் பார்த்துப் பாட்டனார் கேட்டார்; ''உன் வாழ்க்கையின் குறிக்கோளாக எதைக் கொண்டிருக்கிறாய்?'' என்று!

''தாத்தா! எனக்கு வயது பதினாறு ஆகிறது! இதுவரையில் யாராலும் இகழப்படாமல் நல்ல பெயர் எடுத்துவிட்டேன்! இன்னும் நான் வாழவேண்டிய பெரும்பகுதி நாட்களில் பிறரால் இகழப்படாமல் வாழவே விரும்புகிறேன். அதுவே என் குறிக்கோள்! அதற்கு ஏற்ற நல்வழியைத் தாங்கள் எனக்குக் கூறவேண்டும்''

''குழந்தாய்! இங்கிருந்து இருபது கல் தொலைவில் உள்ள அருளூரில் அன்பின் அடிகளார் என்ற பெரியவர் ஒருவர் வாழ்கிறார். வாழ்க்கையின் கடமைகளை உணர்த்தி அவர் ஒரு பெரும் நூல் எழுதிக் கொண்டிருக்கிறார். திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதும் அந்த நூலுக்கு 'நல்வாழ்க்கை' என்றே பெயர்! அவரைச் சூழ்ந்துள்ள நூற்றுக்கணக்கான மாணவர்க்கு அடிகளார், அவரது நூலில் இருந்தே கருத்துரைகளை எடுத்துக்கூறி கனித் தமிழில் விளக்கங்கள் அளிக்கிறாராம்! நீயும் விரும்பினால்! அங்கு சென்று பயின்று வருதல் சிறப்புடையதாக அமையும்''

பாட்டனின் சொற்கேட்டுப் பேரன், அருளூரை நோக்கி விரைந்தான். அடிகளார், 'நல்வாழ்க்கை' எனும் சுவடியை எழுதி முடித்துவிட்டார் என்றும், புதிய மாணவர்களைப் புன்முறுவலுடன் ஏற்றுக்கொள்கிறார் என்றும் ஊரார் கூறிடக் கேட்டு அடிகளார் மனை நோக்கிச் சென்றான்.

அடிகளார் மனையில் பயிற்சி முடிந்து மாணவர்கள், பல்வேறு பொதுப் பணிகளுக்குச் சென்றிருந்தனர். அடிகளார் மட்டுமே தனித்திருந்தார். அவர் எழுதிய 'நல்வாழ்க்கை' எனும் சுவடியைத் தலையணைபோல் தலைக்கு வைத்துக் கொண்டு சிந்தனைத் துயில் கொண்டிருந்தார்.

இளைஞன் ''வணக்கம்'' என்றுரைத்த ஒலி கேட்டுக் கண்விழித்து ''யார்?– என்ன வேண்டும்?'' என்று விளக்கம் கேட்டார்.

அவன் வந்துள்ள விபரமறிந்து மகிழ்ச்சியடைந்தார். ஆயினும் மாணவர் குழுவில் இணைத்துக்கொள்வதற்கு முன்பு வழக்கமாக ஏதாவது ஒரு சோதனை செய்வது உண்டு! அதை அவனிடமும் நடத்திப் பார்க்க விரும்பினார்!

''தம்பீ! இதோ என் தலைக்கு வைத்துப் படுத்திருக்கிறேனே; இது தான் எனது அரிய உழைப்பின் விளைவாக உருவாகியுள்ள 'நல்வாழ்க்கை' எனும் சுவடி! இதனை ஒருவன் படித்து முடித்துவிட்டால், அவன் வாழ்க்கை முழுதும் புகழ்மணம் கமழும்! யாரும் அவனை இகழ்ந்திடா வண்ணம் வாழ்ந்திடும் வகையைச் சொல்லும் இந்தச் சுவடி! இதிலிருந்தே நான் நாள்தோறும் மாணவர்களுக்குக் கருத்துக்களை வழங்குகிறேன்! நீயும் காத்திரு. நாளை முதல் நீயும் அவற்றைக் கேட்டுத் தெளியலாம்.

எனக் கூறிவிட்டுச் சுவடிக் கட்டில் தலைவைத்துப் படுத்துக்கொண்டார். இளைஞன் சிந்திக்கத் தொடங்கினான். அடிகளாருக்கு நல்ல உறக்கம்.

''ஏ, அப்பா! எத்தனை நாட்கள் இங்கு தங்கிப் பாடம் கற்பது! இந்தச் சுவடியே நம் கையில் கிடைத்துவிட்டால்? இதைப் படித்து நாமே நமது வாழ்க்கையைச் சீராக அமைத்துக் கொள்ளலாமே!''

சிந்தனைக்கு சிறகுகளும் முளைத்தன! அடிகளாரை நோக்கினான்; அவர் ஆழ்ந்த உறக்கத்தில் புரண்டு படுத்தார்! அவர் தலை, சுவடிக் கட்டிலிருந்து கீழே இறங்கியிருந்தது! ''இது தான் சமயம் - இந்தச் சுவடியை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டால்? யாருடைய துணையுமின்றி, பிறர் இகழாத வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ளலாமல்லவா?''

மெல்லச் சென்றான்! சுவடிக் கட்டைத் தூக்கிக்கொண்டான்! அங்கிருந்து பூனைபோல் வெளியேற முனைந்த போது;

கலகலவெனச் சிரிப்பு! அடிகளாரின் சிரிப்புதான்! அவன் கைகளைப் பிடித்துக் கொண்டே எழுந்தார்!

“தம்பி, உனக்குத் தேவையானதைத்தான் எடுத்துக் கொண்டாய்! நல்ல காரியத்திற்காகத்தான் இதைப் பயன்படுத்த எடுத்துக்கொண்டாய்! ஆனால் ஒன்று - சுவடியின் முதல் கருத்தாக நான் என்ன எழுதியிருக்கிறேன் தெரியுமா? இதோ படித்துப்பார்! திருக்குறள் கருத்தொன்றைத் தீட்டியிருக்கிறேன்!”

அடிகளாரே அதைப் படித்துக் காட்டினார்.


“மற்றவர்களால் இகழப்படாமல் வாழ்ந்திட விரும்புகிறவன், எத்தன்மையான பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக் களவாட எண்ணாதபடி தனது நெஞ்சத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்.”

இளைஞன், தலைகுனிந்து விழிநீர் வழிய நின்றான்! எத்தன்மையான பொருளாக இருந்தாலும் அதனைப் பிறரை வஞ்சித்துப் பெற முனைதல் இகழ்ச்சிக்கு உரியது என்பதை உணர்ந்து அடிகளார் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். பின்னர். அவரது மாணவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டான்.

“எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு”

அதிகாரம்: 29 கள்ளாமை பாடல்: 281

எள்ளாமை - இகழப்படாமை, கள்ளாமை - களவு செய்யாமை.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்

- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## இதழின் உள்ளே...


1. விநாயக புராணம் அரங்கேறிய ஆலயம் - பத்ம. சித்ர, ஜெயந்தன் 5
2. மூவர் போற்றும் முருகன் - சு. கந்தசாமிபிள்ளை 7
3. அழுந்தூர் ஆமருவியப்பன் - பூசை. ச. ஆட்சிலிங்கம் 10
4. ஆனையும் அழகிய திருமாலும் 11
5 ஆண்டாளின் ஐம்பெரும் வடிவங்கள் 13
6. அன்றாட வாழ்க்கைக்கு ஆன்மிகம் காட்டும் வழிகள் - வி.வி. எஸ். மணியன் 14
7 கோலமிகக் காட்டும் கோலவிழி அம்மன் 17
8. விதைத்தவுடன் விளைவித்த தீர்த்தனகிரி நாதன்! - பனையபுரம் அதியமான் 22
9. சமரசம் - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் (நினைவலைகள்) 25
10. ஆலய வழிபாட்டில் ஆனைகள் 28
11. உலகம் உய்ய உதித்த உடையவர் - பெ. இராமநாதபிள்ளை 31
12. செந்தமிழ் வளர்த்த சிவத்திருஞானியார்- தமிழாகரர் தெ. முருகசாமி 33
13. அருள்மிகு கூடலழகர் திருக்கோயில் 37



அருள்மிகு ஈச்சனாரி விநாயகர்

# விநாயக புராணம் அரங்கேறிய (சென்னை பார்க்டவுன் பிரசன்ன விநாயகர் திருக்கோயில்)

**வி**நாயகப் பெருமானின் பெருமைகளை விரிவாகப் பேசும் நூல் விநாயக புராணமாகும். வடமொழியில் உள்ள பெரிய நூல். இதனைப் பார்க்கவ புராணம் என்பர். இந்நூலைத் தமிழில் பாடியவர் கவிராட்சச கச்சியப்ப முனிவராவார். திருவாவடுதுறை ஆதீன முனிபுங்கவரான இவர் சிறந்த புலவர். அற்புதமான அழகிய நூல்களை எழுதியுள்ளார்.



இம்முனிவர் பெருமான், சென்னை குளத்தூரைச் சேர்ந்த பிரைட்டன் கந்தசுவாமி முதலியார் என்பவரின் வேண்டுகோளின்படி விநாயக புராணத்தைத் தமிழில் பாடினார். அது லீலா காண்டம், உபாசனா காண்டம் என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். ஆராயிரத்துக்கும் மேற்கொண்ட பாடல்களையும் கொண்டதாகும்.

இப்படிப் பெருமை பெற்ற விநாயக புராணத்தை அவர் அரங்கேற்றிய இடம் சென்னையில் உள்ள பிரசன்ன விநாயகர் ஆலயமாகும். சென்னையில் புகழ் பெற்று விளங்கிய பிரைட்டன் கந்தசாமி என்பவரால் இக்கோயில் கட்டப்பட்டது. இங்கு விநாயக புராணம் அரங்கேறிய பெரிய மண்டபம் உள்ளது. இதை நினைவுபடுத்தும் வகையில் திருவாவடுதுறை ஆதீன குரு மகாசந்நிதானம் கல்வெட்டு ஒன்றை நிறுவியுள்ளார்கள். அந்நாளில் புராணம் அரங்கேற்றத்தின் முடிவில் முனிவருக்கு இரண்டாயிரம் வராகன் (அந்நாளைய தங்கக் காசு) காணிக்கையாக அளித்தனர். அதைக் கொண்டு அவர் திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள ஆதீன முதல்வர் நமசிவாய மூர்த்திகளின் மண்டபத்தை கருவறை ஆகியவற்றை கல் திருப்பணியாகச் செய்தார் என்று வரலாறு கூறுகிறது.

விநாயக புராணம் அரங்கேறிய அந்த

**- பத்ம.சித்ரஜெயந்தன்**

**விநாயகர் சதுர்த்தி**
**நாள் 3.9. 2008**

ஆலயம் தனிச் சிறப்பு கொண்டதாகும். கருவறையில் விநாயகப் பெருமான் அனைத்து உயிர்களின் இதயத்தில் நின்றாடும் சபாமூர்த்தியாக விளங்குவதைக் குறிக்கும் வகையில் தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இருபுறமும், சித்தி - புத்தி என்னும் தேவியர் உள்ளனர்.

கருவறை வாயிலில் பலன், அதிபலன் என்னும் பூதர்கள் வாயிற்காவலர்களாக உள்ளனர். முன்புறம் மூஷிகம், பலிபீடம் ஆகியன உள்ளன.

பஞ்ச கோட்டங்களில் விநாயகப் பெருமானே பிரம்ம விநாயகர், விஷ்ணுரூபர் முதலான ஐந்து வடிவங்களில் உள்ளார். கோமுகிக்கு அருகில் கணச்சண்டி உள்ளார்.

கருவறைக்குக் கிழக்கில் தெற்கு நோக்கியவாறு கொலு மண்டபம் உள்ளது. அதில் விநாயகர் இரு பெரும் தேவியருடன் வீற்றிருக்கின்றார். இவரே இத்தலத்துக்கு சோமாஸ்கந்த மூர்த்திக்கு ஒப்பானவர். மார்கழித் திருவாதிரை நாளில் தியாகேசருக்கு நடக்கும் உபசாரங்கள் இவருக்கு நடைபெறுகின்றன.



இச்சபையில் நடராசருக்கு இணையாக நடன விநாயகரை அமைத்துள்ளனர். மார்கழித் திருவாதிரையின்போது (நடராசப் பெருமானைப் போல) இந்த நடராசரை சூரிய பிரபையில் வைத்து உலாவரச் செய்கின்றனர். பத்து நாட்கள் மாணிக்கவாசகர் எழுந்தருளி இவர் முன்பு பாவைப் பாடல் ஓதும் ஐதீக விழா நடைபெறுகிறது.

பள்ளியறை நாயகர் என்ற பெயரில் சிறிய விநாயகரும், வல்லபையும் எழுந்தருளியுள்ளனர்.

சிவாலயங்களில் திரிசூலம் அஸ்திரதேவர் என்ற பெயரில் இருப்பதைக் காண்கிறோம். அதுபோல் இங்கு அங்குசமும், அதன் கீழ் அஸ்திரதேவர் என்ற கணனும் இருக்கக் காண்கிறோம்.

சிவமூர்த்தங்களைப் போல் இப்படி எல்லா வடிவங்களாகவும் விநாயகப் பெருமானை அமைத்துள்ள நிலை வேறெங்கும் இல்லை. அதனால் ஆகமம், சிற்பம், முதலிய நோக்கிலும் இக்கோயில் தனித்தன்மை பெற்றதாகும்.


விநாயக சதுர்த்தி, திருவாதிரைப் பெருவிழா முதலியன தனிச் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகின்றன. தினமும் நன்முறையில் பூசைகள் நடைபெறுகின்றன.

**இடம்**

சென்னை பார்க்டவுனில் இராசப்ப செட்டி தெருவில் கந்தசாமி கோயிலுக்கு அருகிலுள்ள வெங்கடாசல முதலி தெருவில் உள்ளது. தெற்கு நோக்கியது. சென்ன கேசவப் பெருமாள் ஆலயத்தின் தெற்கு மதில் ஓரமுள்ள சந்தின் வழியாகவும் இக்கோயிலைச் சென்றடையலாம்.

# மூவர் போற்றும் முருகன்

**சு.கந்தசாமி பிள்ளை.**
**திருவாவடுதுறை ஆதீனப் புலவர் - சுசீந்திரம்**



தமிழர் கண்ட பெரு இலட்சியம் இரண்டு. ஒன்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது. மற்றொன்று வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட வேண்டுவது முன்னையதற்கு அன்பு அடிப்படை பின்னையதற்கு அருள் அடிப்படை அன்பின் வழியது உயிர் நிலையும் அருளின் வழியது உயர் நிலையும் அமைந்துள்ளது.

மலரவும், நிலை பெறவும், வேறு சில துணைக்குண நலங்களும் இன்றியமையாதன. அவற்றுள் அன்பின் அடிப்படையில் பிறக்கும் வீரம், சிறந்தது. அதனை

**"அறத்திற்கே அன்பு சார்பென்ப**
**- அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை"**

என விளக்கினார் வள்ளுவ பெருந்தகை! மறம் என்றது இங்கு வீரத்தை, தான் வாழ்ந்த பொன்னாட்டை, தான் தோன்றிய குடியைத் தற்காத்து கொள்வதற்கு வேண்டும் வீரம்! அன்பின் அடிப்படையில் பிறப்பது அதுபோலவே அருளுடையார்க்கே. மெய்யான வீரம் பிறக்கிறது.

**"மன்னுயிரோம்பி அருள் ஆள்வார்க்கு,**
**இல்லென்ப**
**தன்னுயி ரஞ்சும் வினை''**

என்றார் தெய்வப் புலவர்!

அடுத்து கொடை **"இரப்பார்க்கொன்றீ யாமை அச்சம்''** என்றார் நாலடியாரில். ஈகையே பொருள் பெற்றான் அருள் பெறும் வழி எனும் தமிழ் மறை அதுவே வாழ்வில் வருகின்ற இணையற்ற இன்பம் மெய்ப்பயன்!

ஈதலை அடுத்து அருளுக்கு வழித்துணையாகப் புகழை ஆன்றோர் கருதினார்கள்! நில்லாவுலகில் நிலைபேறு தருவது பொன்னாப் புகழே என தமிழர் கருதினர்! புகழெனின் உயிரையும் கொடுப்பர்?


இனி, கல்வி, தாம் கண்ட இன்பம் வையகம் காண வேண்டும் என்ற பெரு நோக்கை வளர்க்க வல்லது கல்வியே? அது கேடில்விழுச்செல்வம் ஒருவர்க்கு அன்பிற்கும் அருளுக்கும் பொன்னான துணையாக நிற்பது கல்வி! மனிதன் இழிதகைமையைப் போக்க வல்லது. பொருளுணரக் கட்டறுத்து வீடு பேறளிக்க வல்லது.

அன்பும் அருளும் தழைக்கத் துணைச் சாதனங்களாகிய இந்நான்கையும் தொல்காப்பியர் பெருமிதங்கள் என்றார்.

**"கல்வி, தறுகண் இசைமை**
**கொடையெனச்**
**சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே**
**என்பது**

மெய்ப்பாட்டில் சூத்திரம்! ஆகவே அன்பு, அருள் கல்வி, வீரம், புகழ், ஈகை என்னும் இந்த ஆறும் சங்க காலத் தமிழர்களது இதர வாழ்வின் குறிக்கோள்களாய் விளங்கின இந்த குறிக்கோள்கள் அவர்கள் உயிரினும் சிறந்தெனப் போற்றிய அளவிலே நாளடைவில்

அவை தெய்வ வடிவம் பெற்றன! ஆறு இலட்சியங்களும் தங்கள் அநாதிக் கடவுளும் முருகனின் திருமுகங்கள். ஓராறாக அமைந்து விட்டன.



நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படை, குமர குருபரர் பாடிய கந்தர் கலிவெண்பா, அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ் முதலியவற்றில் சங்க காலத் தமிழரின் இலட்சியங்கள் போற்றப்படுவதைக் காண்கிறோம் திருச்சீரலைவாய் என்னும் சீர்கெழுசெந்தூரில் முருகன் தோன்றுவதை குறிப்பிடும் இடத்தில் தான் நக்கீரர் அறுமுகங்களின் உட்பொருள் விளக்கம் கொடுக்கிறார்! அவரை பின்பற்றியே குமர குருபரரும், அருணகிரிநாதரும் ஆறு இலட்சியங்களையும் ஆறு முகங்களின் மேல் ஏறிச் சொல்லும் நயம் வியத்தற்குரியதாகப் பொலிகின்றது.

**"தாவில் கொள்கைத் தந்தொழில்**
**முடிமார்**
**மனனோர்பு எழுதரு வாணிற.** ஒரு முகமானது, ஆறுமுகங்களாக விரிகின்றது.

முதலில்

**"மாயிருண் ஞாலம் மறுவின்றி விளங்கப்**
**பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் என்பார்**
நக்கீரர்.

இது அருள் முகம், அறிவற்ற மூலமாயைப் பொருளிலிருந்து இந்த உலகத்தை விளங்கச் செய்கின்றன. இறைவன் தனு, கரண, புவன, போகங்களைத் தோற்றுவிக்கிறான்? உயிர்கள் தங்கள் பலங்களில் நின்று விடுதலை பெற்று, உய்ந்து இறையொளி பெறுவதற்கு உயிர்கள் பால், கொண்ட பெருங்கருணையால்,

**"இருள் சூழ் அறையில் இருந்தது நாடிப்**
**பொருள்சூழ் விளக்கது புக்கெரிந்**
**தாற்போல்**

அவன் தனது ஐந்து தொழிலைச் செய்கின்றான். அதுவே அறுமுகனின் அருள் முகம். நக்கீரர் கருத்தை நன்குணர்ந்த அருணாகிரியார் சுருக்கமாக

**"ஏறு மயிலேறி விளையாடும்**
**முகமொன்றே''**
**என்று திருப்புகழில்**
**பாடினார்.**

நக்கீரர் குறித்த "மாயிருண் ஞாலத்துக்கு மயிலையும் இறைவன் ஐந்தொழிலாற்ற, "பல்கதிர் விரித்தலுக்கு விளையாடுதலையும், அருணகிரியார் முறையே சுட்டிக் காட்டினார். இவர்களுக்கு பின்னே வந்த குமரகுருபரரும் அருள் முகத்தை

**"எவ்வுயிர்க்கும் - ஊழ்வினையை**
**மாற்றி உலவாத பேரின்ப - வாழ்வு**
**தரும் செய்யமலர் முகமும் என்று''**

பாடியவிடத்தும் அருள்முகத்தையே குறித்து போற்றுகின்றார்!

அடுத்து கொடை முகத்தைத் திருமுருகாற்றுப்படையில்

**"ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிதொழுகிக்**
**காதலின் உவந்து வரங் கொடுத்தனரோ**
என போற்றுகின்றார் நக்கீரர்

இதனைத் திருப்புகழாசிரியர்

**"கூறும் அடியார்கள் வினை தீர்த்த**
**முகமொன்றே''** என்றும், குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில்

**"வந்தடியின் சேர்ந்தோர் மகிழ**
**வரம்பலவும்**
**தந்தருளும் தெய்வமுகத் தாமரையும் என**
**போற்றுகின்றார்கள்!**

மூன்றாவதாக ஞான முகத்தைக் குறிப்பிடுகிறார் கல்வி என்னும் தொல்காப்பியத்தின் பெருமிதத்துக்கு தெய்வ விளக்கமாய் பொலிந்தது.

**"மந்தரவிதியின் மரபுளி வழாஅ**
**அந்தணர் வேள்வியோர்க் கும்மே''**
என்றார் நக்கீரர்

**அருணகிரியார் இதனை திருப்புகழில்**
**"ஈசரோடு ஞானமொழி பேசும்**
**முகமொன்றே''** என்றும், குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில்

**வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்,**
**முடிக்கும் கமல முகமும்''** என்னும் விளக்கமளித்தார்.

நான்காவது நக்கீரர் கூறும் புகழ் முகம்

**"எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்**
**திங்கள் போலத் திசை விளக்கும்மே"**

முருகன் பெரும்புகழ் அவன் வெற்றி கொண்டு


வேலோடு நிற்கும் காட்சியை

**"குன்றுருவ வேல் வாங்கி**
**நின்ற - முகம் ஒன்றே"**

என்று புகழ்முகமாகக் கொண்டார் என கருதலாகும்! அங்ஙனமே

**"பாச இருள் துரந்து**
**பல்கதிர்ச் சோதிவிடும்**
**வாசமலர்வதன மண்டல**
**மும்"** என

குமரகுருபரரின் திருவாக்கும், இருளை வென்ற ஒளி முகத்தைக் குறிப்பதாகவே கொள்ளக் கிடக்கிறது.



இனி வீர முகம் - நக்கீரர் திருமுருகாற்றுப் படையில்

**"செறுநர்த் தேய்த்துச் செல்சமமுருக்குச்**
**கறுவு கொள் நெஞ்சமொடு - களன்**
**வேட்டன்றே"** என்றார்.

இதனை அருணகிரியார் திருப்புகழில்,

**"மாறுபடு சூரரை வதைத்த**
**முகமொன்றே"** என்றும், கந்தர்கலி வெண்பாவில் குமரகுருபரர்

**"வெவ்வ சுரர் போற்றிசைக்கும் வெஞ்**
**சூரனைந்தடித்து**
**தெவ்வர் உயிர் சிந்தும் திருமுகமே"** என விளக்குகிறார்.

இறுதியாக அன்பு முகம் - காதல் முகம்.

**"குறவர் மட மகள் கொடி போல் -**
**நுசுப்பின்**
**மடவரல் வள்ளியோடு**
**நகையமர்ந்தன்றே"**

என்றார் நக்கீரர்.

அருணாகிரியாரும் திருப்புகழில்

**"வள்ளியை மணம் புரிய வந்தமுகம் ஒன்றே"** என்று இரத்தினச் சுருக்கமாக அருளினார்! ஆனால், குமரகுருபரரோ, கலிவெண்பாவில்

**"போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் -**
**பூங்கொடிக்கும்**
**மோகம் அளிக்கும் முகமதியும்"**

என்று வள்ளியோடு தெய்வயானையையும் இணைத்துக் கூறிய காட்சி, கற்பிக்கும் சிறப்பளிப்பதை காணலாம்.

நக்கீரரும் அவர் அடிச்சுவடு பற்றி அருணகிரியாரும் வள்ளியினை மட்டுமே, குமரனின் தெய்வக் காதலுக் குரியவராகக் கொண்டார்கள்! வள்ளித் திருமணமே தமிழ் அகத் துறையில், களவு, கற்பு எனும் இருநெறிகளையும் தழுவிய திருமணமாகும். தலைவன்பால் தலைவி கொள்ளும் காதல் ஏக, போக, உரிமை கொள்கிறது.

பகிர்ந்து அளிக்க மறுக்கின்றது என்ற நுட்பம் அறிந்தவர்கள் சங்க காலத் தமிழர்.

ஆகவே தான் இளங்கோவடிகளும் குன்றக் குரவையில் வள்ளியொருத்தியையே குறிஞ்சி மங்கையர் என குறிப்பிட்டுள்ளார்!

**"வேலனார் வந்து வெறியாடும்**
**வெங்களத்து**
**நீலப்பறவை மேல் நேரிழை தன்னோடும்**
**சூலமர் செல்வன் புதல்வன் வரும்"**
**என்றும்**
**குறமகள் அவளெம் குல மகள் -**
**அவளொடும்**
**அறுமுகமொருவ நின் அடியிணை -**
**தொழுதே"**

என்றும் வந்துள்ள சிலப்பதிகாரம் அடிகள் சான்று தரும்

இங்ஙனமாக அறு முகத்தினையும், தங்கள் வாழ்வின் ஆறு இலட்சியங்களின் தெய்வ வடிவாகத் தமிழர் கண்டனர்.

அந்த ஆறு இலட்சியங்களும் ஒன்றையொன்று பிரியாதன? ஒன்றிலாவது மற்றொன்றிலாவது இம்மைக்கும் மறுமைக்கும் உறுதிப்பயப்பன.

இதுவே **"ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும் ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே"** என அருணகிரியார் வேண்டுதலுக்கு முத்தமிழ் முதலாசிரியன், முருகவேள், செந்தூர் முருகன், கந்த சஷ்டி விழாவில் காட்சி தரும் விடையாக இருக்கலாம்.

அந்த நக்கீரர் போற்றும் நாயகனை, அருணகிரியார் போற்றும் அனுபூதி நாயகனை, குமரகுருபரர் போற்றும் குன்றில் வாழ் குமரனை, சஷ்டி விழாவில் தரிசிப்போமாக! தெய்வத் திருவருள் பெறுவோமாக!

# அழுந்தூர் ஆமருவியப்பன்



**ஆவணி** மாதம் கண்ணன் அவதரித்த மாதமாகும். கண்ணன் மண் மேல் வந்து ஆயர்பாடியில் வளர்ந்து திருவிளையாடல்கள் பலவற்றை நிகழ்த்தியுள்ளான். அவன் அடியவர்களுக்காக பலலீலைகளை அவரவர் விரும்பிய இடங்களில் காட்டியுள்ளான். அவற்றைக் கிருஷ்ண க்ஷேத்திரங்கள் என்பர். அவற்றில் ஒன்றாகத் திகழ்வது திருவழுந்தூர் ஆமருவியப்பன் திருக்கோயிலாகும்.

குடந்தை, மயிலாடுதுறை ஆகியவற்றிற்கு அருகிலுள்ள திருப்பதியான திருவழுந்தூர் இந்நாளில் தேரழுந்தூர் என்று அழைக்கப்படுகிறது. பெரிய திருக்கோயில் கருவறையில் எழுந்தருளியிருக்கும் திருமால் தேவாதிராஜன் என்று அழைக்கப்படுகிறார். இவரை வழிபட்டுக் கொண்டிருப்பவர்களாக கருடன், பிரகலாதன், மார்க்கண்டேயர், காவிரி அகத்தியர் ஆகியோர் கருவறையில் எழுந்தருளியுள்ளனர்.

மூலவருக்கு முன்புறம் உலாத் திருமேனியாக எழுந்தருளியுள்ள பெருமானுக்கு ஆமருவி யப்பன் என்பது பெயர். (ஆ-பசுக்கள்; மருவி - சேர்ந்து இருத்தல்) பசுக்களோடு சேர்ந்திருக்கும் அப்பன் என்பது பொருள்.

ஒருசமயம் ஆயர்பாடியில் கண்ணன் ஆயர்குலச் சிறுவர்களோடு விளையாடி மகிழ்ந்திருந்தார். பிரம்மதேவன் அவர்களுடைய மாட்டு மந்தைகளை ஓட்டிக் கொண்டு காவிரிக் கரைக்கு வந்து விட்டார். விளையாட்டு முடிந்த பின் ஆயர்குலச் சிறுவர்கள் தமது மாட்டு மந்தையைக் காணாது தவித்தனர். கிருஷ்ணர் தமது சக்தியால் புதிய பெரிய மந்தையைப் படைத்து ஆயர்களுக்கு அளித்தார். அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

பிரம்மதேவன் நடந்ததை அறிந்தார். கண்ணபிரானிடம் மன்னிப்பு வேண்டினார். காவிரிக் கரையில் எழுந்தருளும்படிக் கேட்டுக் கொண்டார். அதன்படி கிருஷ்ணர் தேவாதிராஜனாக அங்கு தோன்றினார். அங்கிருந்த பசுக் கூட்டம் மகிழ்ந்து அவரைச் சுற்றிச் சுற்றி வந்தன. ஆக்களை (பசுக்களை) மருவி நின்றதால் பெருமாள் ஆமருவியப்பன் என்று பெயர் பெற்றார்.

இவரைக் காவிரியன்னையும் அகத்தியரும் வழிபட்டுப் பேறு பெற்றனர். இவருடைய திருவுருவங்களும் கருவறையில் இடம் பெற்றுள்ளன.

உற்சவர் கண்ணபிரானின் வடிவில் இல்லாமல் சங்கு சக்கரம் ஏந்தி கதாயுதத்துடன் அபய முத்திரையுடன் விளங்குகிறார். பெயருக்கேற்ப கண்ணனுடன் கூடிய பசு ஒன்று அவருடன் உள்ளது. கண்ணன் பிறந்த நாளான ஸ்ரீஜெயந்தியில் (கிருஷ்ண ஜெயந்தி 23.08.2008) ஆமருவியப்பனை தரிசித்து மகிழலாம். அத்துடன் ஆடிப் பெருக்கு நாளில் 02.08.2008 காவேரியையும் பெருமானையும் சேர்த்தே இங்கே தரிசிக்கலாம்.

திருவழுந்தூர் சிறந்த பாடல் பெற்ற சிறந்த தலமும் ஆகும். கம்பர் பிறந்த ஊர். கம்பர் அவருடைய மனைவியுடன் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

---

**- பூசை.ச.ஆட்சிலிங்கம்.**
**புலவர், திருமயிலை கபாலீச்சரம்.**

# ஆனையும் அழகிய திருமாலும்



ஆனையைக் கண்டதும் வைணவர்களுக்கு கஜேந்திரனும் அவனை முதலை வாயினின்று காத்த திருமாலுமே நினைவுக்கு வருகின்றனர். ஆனைக்கு அருள் செய்த அப்பனை யானையோடு ஒப்புமை வைத்து சிந்தித்து மகிழ்கின்றனர் அவர்கள்.

திருமங்கையாழ்வார் பெருமானை நந்தனார் களிறு என்று சொல்லி உவக்கின்றார். திருவல்லிக்கேணியில் அருளிச் செய்துள்ள பெரிய திருமொழியில்.

**''வேதத்தை வேதத்தின்**
**சுவைப்பயனை**
**விழுமிய முனிவர் விழுங்கும்**
**கோதில் இன்கனியை நந்தனார்**
**களிற்றை**
**குவலயத்தோர்**
**தொழுதேத்தும்**
**ஆதியை அமுதை என்னை**
**ஆளுடைய**
**அப்பனை ஒப்பவர் இல்லா**
**மாதர்கள் வாழும் மாட**
**மாமயிலைத்**
**திருவல்லிக்கேணி**
**கண்டேனே''**

என்று கூறுகின்றார். இதில் நந்தனார் களிறு என்று பெருமானைக் கொண்டாடு கின்றார். பெருமான் நந்தகோபர் திருமாளிகையில் யானைக் கன்றுபோல் விளையாடி மகிழ்பவன் என்பது அதன் பொருளாகும்.

யானைக்கும் பெருமானுக்கும் பலவகையான ஒப்புமைப் பண்புகள் உள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கண்டு மகிழலாம்.

1. யானையை எத்தனை முறை பார்த்தாலும் அலுப்பதில்லை. காணும்போதெல்லாம் புதிய அரிய பொருளைப் பார்ப்பதைப் போலவே மகிழ்ச்சியைத் தருகின்றது. பெருமானும் அப்படியே அப்போதைக்கப்போது. புதிய வனாக ஆரா அமுதாக விளங்குகின்றான்.

2. யானை மீது ஏற வேண்டியவன் அந்த யானையின் உதவியுடன் அதன் காலைப்பற்றியே ஏற வேண்டும். எம்பெருமானின் காலைப்பிடித்தே பகவானின்

துணையோடு தான் அவனை அடைய முடியும்.

3. யானை தன்னைக் கட்டுவதற்கான சங்கிலியைத் தானே சுமந்து வந்து கொடுக்கிறது. அதுபோலவே அவனை அடையும் உபாயம் அவனிடமிருந்தே வருகின்றது. பெருமானைப் பற்றும் கயிறான எட்டெழுத்து மந்திரம் அவனிடமிருந்தே வந்ததாகும். அவன் அளித்த பக்தியாலேயே அவன் கட்டுண்டு அருள்புரிவதைக் காண்கிறோம். அவனை அறியும் அறிவு அவனிடமிருந்தே வந்தது என்பதை மயர்வற மதிநலம் அருளினன் என்பர்.

4. யானையை நன்கு நீராட்டி விட்டாலும் அடுத்து பொழுதே மண்ணை வாரி மேலே இட்டுக் கொண்டு அழுக்கோடு நிற்கும். அவன் இயல்பில் பவித்ரனாகவே இருக்கிறான் என்றாலும், நம்மீது கொண்ட பேரன்பால் பொய்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கமும் அழுக்கும் உடைய நம்போல்வாரோடு சேர்ந்து களித்திருக்கின்றான்.

5. யானையைப் பிடிப்பவர்கள் பெண்யானையைக் காட்டி ஆண்யானைகளை வசப்படுத்துகின்றனர். அதுபோல் தாயாரைத் துணைகொண்டே எம்பெருமானின் அருளைப் பெறுகின்றோம்.

6. யானை தனது பாகனின் அனுமதியின்றி பிறர் தன் பக்கம் வந்தால் தள்ளிவிடும். அதுபோலவே எம்பெருமானும் வேதவல்லவர்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் பணிந்து வரும் அடியவர்களை முன்னிட்டு வருபவர்களையே ஏற்று அருள்புரிகின்றான். மற்றவர்களை ஏற்பதில்லை. பாகவதர்கள் பொருட் டாகவே பரமன் மற்றவர் களுக்கும் அருள்புரிகின்றான்.

7. யானையானது பாகன் சொற்படியே படுக்கும். நிற்கும், நடக்கும், அதுபோலவே எம்பெருமான் அடியவர்கள் இச்சைப்படியே நடக்கின்றான். கணிகண்ணன் போகின்றான். காமரு பூங்கச்சி மணிவண்ணா நீ கிடக்க வேண்டாம் பைநாகப் பாயைச் சுருட்டிக் கொள் என்றபோது சுருட்டிக் கொண்டு அவன் பின் நடந்தான். பின்னர் பைநாகப் பாயை விரித்துக்கொள் என்றபோது, கணப்பொழுதும் தாமதியாது படுத்தான். அவன் பக்தர்கள் சொற்படி எல்லாம் நடக்கின்றான்.

8. யானை இருக்கும் போது மகிழ்வைத் தருவதுபோலவே இறந்தபின்னும் உயர்வு பெறுகின்றது. யானை இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன் என்பது பழமொழி.


எம்பெருமான் மண்மேல் வந்து லீலைகளால் நம்மை மகிழ்விக்கிறான். அவதார நோக்கம் நிறைவேறிய பின்னர் தம் சோதிக்கு எழுந்தருளிச் சென்றுவிடுகின்றான். அவன் இருந்தபோது நடத்திய லீலைகள் புராணங்களாக இதிகாசங்களாக நம்மை மகிழ்விக்கின்றன. அவன் நினைவும் அருளும் எப்போதும் நம்மைவிட்டு அகலாதிருக்கின்றது.

இப்படியே எம்பெருமானுக்கும் யானைக்கும் இன்னும் அனேக ஒற்றுமைகளைக் காண்கிறோம்.

கஜேந்திரவரதன் பக்தர்களுக்கும் பரமபாக்கியமாக இருக்கின்றான்.


திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

# ஆண்டாளின் ஐம்பெரும் வடிவங்கள்



வைணவ ஆலயங்களில் முதன்மைத் தெய்வத்தை ஐந்து வடிவங்களில் வைத்து வழிபடுவர். இவை தருபேரம், யாகபேரம். ஸ்நானபேரம், செல்வர்(பலிபேரம்) உற்சவர் என ஐந்தாகும். தருபேரம் என்பது மூலவர். முன்னாளில் அத்திமரத்தால் செய்து காரையிட்ட வடிவங்களையே மூலவராக அமைக்கும் வழ்ககம் இருந்தது. தரு(மரம்) வடிவில் இருந்ததால் இது தருபேரம் எனப்பட்டது. இதுபோல் ஒவ்வொன்றிருக்கும் காரணப் பெயர் அமைந்துள்ளது.

இதுபோல் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் ஆலயத்தில் ஐந்து வடிவங்களில் அவள் எழுந்தருளி அருள்பாலிக்கின்றாள். இவை ஐந்திற்கும் ஐந்து சிறப்புப் பெயர்கள் உள்ளன.

கருவறையில் மூலவராக எழுந்தருளியுள்ள ஆண்டாள் சுதையால் ஆனவள். இவ்வடிவிற்க்கு **சூடிக்கொடுத்தாள்** என்பது பெயர். இலக்கியங்கள் இப்பெயராலேயே இவளை அழைக்கின்றன. கல்வெட்டுக்களில் இப்பெயரே அதிகம் காணப்படுகின்றது.

கௌதுக பேரம் ஆண்டாளுக்கு **மல்லி வளநாடி** என்பது பெயர். இப்பகுதிக்கு மல்லி வளநாடு என்பது பெயர். இப்பகுதியை ஆள்பவள் என்ற பொருளில் இப்பெயர் வழங்குகிறது. இது வெள்ளியால் செய்யப்பட்ட திருவுருவமாகும். இவளை **மல்லிநாடாண்ட மடமயில்** என்பர்.

ஸ்நான பேரம் எனப்படும் திருமஞ்சனத் திருமேனிக்கு **புதுவை ஆண்டாள்** என்பது பெயர். புதுவை என்பது ஸ்ரீவில்லிபுத்தூரின் பெயர்களில் ஒன்றாகும்.

வீதி கண்டருள்வான் என்னும் உற்சவத் திருமேனிக்கு **திருப்பாவை பாடினாள்** என்பது பெயர். பாவை பாடியதால் இப்பெயர் பெற்றாள்.

நித்தியோற்சவ(என்னும் பலிபேரம்) ராக உள்வலம் வந்து ஸ்ரீபலி சாதிக்கும் ஆண்டாளுக்கு **வேயர் பயந்த விளக்கு** என்பது பெயர்.

பின்சொன்ன மூன்று திருமேனிகளும் செம் பொன்னால் (செம்பினால்) செய்யப்பட்டவைகளாகும்.

ஆண்டாளின் இயற்பெயர் கோதை. அதை வடமொழியில் கோதா என்பர். ஸ்ரீமத் தேசிகன் கோதாஸ்துதி என்ற நூலை அருளிச் செய்துள்ளார்.

# அன்றாட வாழ்க்கைக்கு ஆன்மிகம் காட்டும் வழிகள்

''ஒன்றே குலம் ஒருவனே தேவனும்,
நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே
சென்ற புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நிர்நினைந்து உய்மினே.''
திருமூலர் திருமந்திரம்

நம்மிடையே இருந்து மறைந்த பல ஞானிகளும் மேதாவிகளும் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று வழிகாட்டியிருக்கின்றனர்.

நல்ல மக்களாக வாழ்ந்து காலம் என்ற மணலில் நமது அடிச்சுவடு களைப் பதித்துச் செல்லலாம் என ஓர் ஆங்கிலக் கவிஞர் தமது கவிதையில் கூறுகிறார்.


Lives of great men all remind us
We can make our lives sublime,
And departing,leave behind us

Foot prints on the sands of time.
*A Psalam of life.Hendry Wadsworth Long fel low*

வறுமையிலும் வாழ்ந்த சாதாரண மக்கள் தன்னுடைய விடாமுயற்சி, பொறுமை, அயராத உழைப்பு இவைகளால் பெரும் புகழ் பெற்றனர். அவர்களைப் போன்று சாதனைகளை யார் வேண்டுமானாலும் அடையலாம். இந்த உலகத்தில் பிறந்த எல்லா மனிதனுக்கும் கடவுள் ஒரு தனித் திறமையை அளித்திருக்கிறான். அந்த திறனை வெளிப்படுத்தி நல்ல மக்களாக எப்படி வாழ வேண்டும் என்ற படிப்பினையைத் தருவது ஆன்மிகம்

ஆன்மிகம் என்றால் கடவுள், ஆன்மா, பிறப்பு, இறப்பு இவைகளைப் பற்றி கூறும் தத்துவங்கள்.

ஆன்மிகம் பற்றிய சரியான விளக்கங்களை கற்றறிவது மிகவும் அவசியம். ஆன்மிகம் என்பது சாதி மத பேதமின்றி யாவருமே கற்றறிய வேண்டிய பயனுள்ள கலை ஆகும்.



''சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச்
சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல்
அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலை
தனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர்
ஒருவர் அவர் தாமே
வீதியிலே அருட்சோதி
விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம் இது
கூவுகின்றேன் உமையே''

என்று இராமலிங்க அடிகளார் கூறியிருக்கிறார்.

இதே கருத்தை ரிக் வேதத்திலும் சொல்லப்படுகிறது.

In the eyse of the Lord, no
One is big or no one is small, all
Are alike, all are recipients of
Godly love and blessing
For prosperity
Rig Veda

ஆண்டவன் மேல் பக்தி கொண்டு, அன்றாட வாழ்க்கையில் நேர்மையும், ஒழுக்கத்தையும் கடைபிடித்தால் உலகம் முழுவதும் அமைதி பூங்காவாக மலரும். அன்பு ஆறாக ஓடும். ஆனால், இன்று அடிப்படை பிரச்சனைகள் அளவில்லாமல் வளர்ந்து கொண்டே போகிறது. மக்கள் பல வகையான சிக்கல்களில் சிக்கி தவிக்கின்றனர். உலகம் மிகவும் சிதறிப் போய் விட்டது. எங்கு பார்த்தாலும் யுத்தங்கள், கலவரங்கள், ஜாதி மதச் சண்டை, ஏழ்மை, பசி, பட்டினி, கொடிய நோய்கள் போன்ற பல

**- வி.வி.எஸ்.மணியன்**

வகையான துன்பங்களை மனிதகுலமே அனுபவிக்கிறது. இது மட்டுமல்லாமல் அரசியல், செல்வம், அந்தஸ்து என சமூகம் தனித்தனியாக சிதறிவிட்டது. ஒவ்வொரு பிரிவும் தன் நலனுக்காகவும், அதிகார பலத்தை அடையவும் பலவகை போட்டா போட்டிகளில் ஈடுபடுகின்றது. இப்போராட்டங்களினால் பகைகளும் வன்முறைகளும் வளர்கின்றன. இந்த சூழ்நிலையில் மக்கள் கவலைகள், நிச்சயமின்மை, பாதுகாப்பின்மை, எதிர்காலத்தைப் பற்றிய பயம், கோபம், வெறுப்பு என்ற பல உணர்ச்சிகளுக்கு ஆளாகின்றனர். இவைகளுக்கிடையிலும் நாம் மகிழ்ச்சியுடன் வாழத் தேவையான மன உறுதியையும், உடல் வலிமையையும் மாறாத தன்நம்பிக்கை உணர்வையும் ஊட்டி மகிழ்ச்சிகரமாக வாழச் செய்வது ஆன்மிகம். ஆனால், நாம் நல்ல வழியில் செல்கிறோமா என்பது தான் கேள்விக் குறி?

நாம் எல்லோரும் சுயநலவாதிகளே, நான் நல்லவனே, ஆன்மிகம் எனக்கல்ல என்ற எண்ணம் பலரிடம் மிகுதியாக நிற்கின்றது. இந்த எண்ணம் அறிவு வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கின்றன. இத்தகைய மன உளைச்சல்களுக்கு இடம் கொடுக்காமல் மனதை நடுநிலையில் நிறுத்தி எல்லாவற்றையும் சரிசமமாகக் காணவே சமயப் பெரியோர்கள், ஞானிகள் நமக்கு அறிவுரை கூறுகின்றனர். எல்லாவற்றையும் திறந்த மனப்பான்மையுடன் காணுமாறு அறிவுறுத்தியுள்ளனர். யேசுபிரான் ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மற்றொரு கன்னத்தையும் காண்பியுங்கள் எனக் கூறினார். நபிநாயகம் அவர்கள் பொழுது சாயும் முன்பு உங்கள் விரோதங்களை மறந்து விடுங்கள் என்றார். இவ்வாறே புத்தர் பிரான் மதச்சான்றோர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சைவ சித்தாந்தப் பெரியோர்கள் யாவரும் கூறியுள்ளனர்.

**நன்மை தீமை**

உலகில் நன்மை தீமை என்று ஒன்றும் இல்லை. ஒருவனது நன்மை மற்றவனுக்கு தீமையாகவும் ஆகலாம். அல்லது ஒரு சூழ்நிலையில் தீமை விளைப்பது வேறு ஒரு சூழ்நிலையில் நன்மையாகவும் முடியலாம். நாம் காண்பதெல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுடன் சார்புற்றவைகளே. வெளித்தோற்றம் எவ்வாறு இருப்பினும் அதன் உண்மையான இயல்பைச் சிந்தித்து உணர்வதே ஆன்மிக அறிவாகும்.

**ஆன்மிகம் என்றால் என்ன?**

ஆன்மிகம் என்பது எதையும் முற்றிலும் துறந்து வாழ்வது அல்ல, இயற்கை நமக்கு அளிக்கும் எதையும் மறுக்கவோ அல்லது அதனின்று அடையும் மகிழ்ச்சியை ஒதுக்கவோ தேவை இல்லை. நாம் எல்லா வகைகளிலும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு இறைவன் அருள் புரிகிறான். அவன் படைத்த எல்லா படைப்புகளும் ஒன்றுடன் மற்றொன்று இணங்கி சுமூகமாக வாழவே இறைவன் விரும்புகிறான்.

நம் மகிழ்ச்சியே பெரியது, அடுத்தவன் துன்பப் பட்டால் நமக்கு என்ன என்ற எண்ணம் நமக்கு ஊறு விளைவிக்கும் என்று கூறுகிறது ஆன்மிகம். நல்லது செய்யின், நல்ல பயன் கிட்டும் என்பது ஆன்மிகம் காட்டும் வழி. இதற்கு உதாரணமாக நீதிநெறியில் ஒரு கதை உண்டு.

ஒரு சமயம் நெறி முறை தவறாமல் ஒரு மன்னர் நாட்டை ஆண்டு வந்தார். அவர் தன் குடிமக்கள் எந்த அளவு பொறுப்புணர்வுடன் வாழ்கிறார்கள் என்று பார்க்க விரும்பினார். ஒரு நாள் சாதாரண குடிமகன் போல் வேடமணிந்து நாட்டை வலம் வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் ஒரு குறுகலான தெருவினைக் கடக்கும்போது ஒரு யோசனை உதித்தது. உடனே தெருவின் நடுவில் ஒரு குழி தோண்டி அதில் ஒரு சிறிய செப்புக் குடத்தைப் புதைத்தார். அதன் மீது ஒரு பெரும் பாறாங்கல்லை வைத்து விட்டு அருகில் இருந்த மரத்தில் ஒளிந்து கொண்டு நடப்பதை கவனித்துக் கொண்டிருந்தார். முதலில் ஒரு விவசாயி மாட்டு வண்டியில் வந்தான். அவன் கல்லை கவனித்து விட்டு அதில் வண்டி மோதா வண்ணம் வண்டியை ஓட்டிக் கொண்டு சென்று விட்டான்.

பின்னர் ஒரு காவலாளி வந்தான். கல்லை கவனித்து அவன், சே ஒருவருக்கும் பொறுப்பில்லை என்று திட்டி விட்டு ஓரமாகச் சென்று விட்டான்.

அடுத்ததாக வந்த பால்காரி கல்லால் தடுக்கி விழுந்தாள். அவள் கொண்டு வந்த பால் முழுவதும் கொட்டி விட்டது. அதனால் கோபம் கொண்டு இங்குள்ளவர்களுக்கு கண்ணே இல்லைபோலும் என்று பலவாறு புலம்பி விட்டுச் சென்றாள்.

தொடர்ந்து குதிரையில் வந்த சில வணிகர்கள் கல்லை கவனித்து விட்டு அங்கு வாழ்ந்து வரும் மக்களுக்கு சிறிதும் பொறுப்பில்லை என்றெல்லாம் தங்களுக்குள் சொல்லிக் கொண்டு சென்று விட்டனர்.

அந்த சமயம் ஒரு மாணவன் வந்தான். அந் கல்லை கண்ட அவன் தன் குருநாதன் பொது ந சேவையை குறித்து கூறியதை நினைவு கூர்ந் உடனே கல்லைப் புரட்டி சாலையின் ஓரமா

போட்டான். அப்போது கல்லுக்கடியில் உள்ள சிறிய குடம் தென்பட்டது. அதை திறந்து பார்க்க, நிறைய பொன்னும் மணியும் கண்டு மகிழ்வு கொண்டான். ஆனாலும், அதனை தானே வைத்துக் கொள்ளாமல் மறுநாள் அரசவை சென்று அரசரிடம் அந்த பொருளைக் கொடுத்தான். அவனுடைய குணத்தைக் கண்டு வியந்த அரசர் அவனைப் போற்றி தன் முக்கிய மந்திரியாக நியமித்தார்.

இந்தக் கதையில் இருந்து மற்றவர் நலனையும் பற்றி கருத்தில் கொண்டு பண்பாட்டுடன் வாழ்வது அவசியம் என்று தெரிகிறது. நம்முடைய கொள்கைகள் நம்பிக்கைகள் வெறுப்பு எதையும் அனுபவத்தின் வாயிலாக கண்டறிந்து தங்களை மாற்றிக் கொண்டு வாழத் தயாராய் இருப்பவர்களே ஆன்மிகத்தை அறிந்து கொண்டவர் ஆவர்.

**கடமையும், கண்ணியமும்**

நமக்கேற்ற வழிகளில் பொறுப்புகள், கடமைகள் இவற்றை செவ்வனே செய்யவும் ஆன்மிகம் வழி வகுக்கின்றது. நாம் எந்த தொழிலை செய்தாலும் எத்தொழிலை செய்தாலும் நமது அறிவையும் திறன்களையும் முழுவதுமாக பயன்படுத்தி சமூக நலனை வளர்க்கலாம். மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், உழைப்பாளிகள், விவசாயிகள், பொறியியல் வல்லுனர்கள் யாவருமே பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையிலும் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத வகையிலும் நேர்மையாகவும் சமூக ஒற்றுமையையும், இணக்கத்தையும் உறுதியாக்கவும் செயல்பட்டு வளர்ச்சியை தாங்கள் அடைவதோடு சமுதாயத்தின் வளர்ச்சியையும் உருவாக்கலாம்.

செல்வம், பதவி, புகழ் இவைகள் எவ்வழியி லாவது பெற்று அடுத்த வீட்டுக்காரனை விட நாம் சாமர்த்தியசாலி எனக் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற பேராசைக்கு அடிமையாகி விட்டால் பல துன்பங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கும். இந்தக் கருத்து மிகவும் அருமையாக நாலடியாரில் குறிப்பிட்டுள்ளது.

**''மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து**
**சிறுமைக்குப் படாதேநீர் வாழ்வின் -**
**அறிஞராய்**
**நின்றுழி நின்றே நிறம்வேறாங் காரணம்**
**இன்றிப் பலவு முள''**

(பிறவித் துன்பம் தொடருவதற்குக் காரணமே ஆசை தான் . எனவே, பிறவித் துயருக்கு விதையான ஆசையை விட்டு விட்டுப் பொறுமையோடு வாழுங்கள். சிறுமை அடைய எண்ணாதீர்கள். இருப்பது போல் தோன்றும் இளமையும் வாழ்வும் இப்படியே இருக்காது.மாறும் - மறையும் இன்னும் எத்தனையோ இடர்பாடுகளும் இங்குண்டு. எனவே,என்றும் சான்றோராய் வாழ முயலுதலே சிறப்பு)

துன்பம், இன்பம், வெற்றி, தோல்வி என்று எத்தனையோ இடர்பாடுகளுக்கிடையே மனிதன் இன்று வாழ்கிறான். தோல்வியும் வெற்றியும் , ஏமாற்றங்களும், எதிர்பார்ப்புகளும் மாறி மாறி வருகின்றன. வெற்றி தோல்விகளால் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ சான்றோர்கள் வழிகாட்டி இருக்கின்றனர். இக்காரணத்தினாலேயே கண்ணபிரான் பகவத்கீதையில் பலன்களை எதிர்பாராது உன் கடமைகளை எனக்காக (சமூகத்திற்காக) செய்ய மாறாத மனநிலைமை (ஸ்திதப்ஞன்) கொண்டு வாழ் என அறிவுரை கூருகிறார்.

உலகத் தோற்றமும், முடிவும், மனிதனது பிறப்பு, இறப்பு செயல்கள் இவற்றிக்கிடையேயுள்ள தொடர்புகளை விசாரணை செய்து யூகிக்கப்பட்ட விஷயங்களை தத்துவ சாத்திரங்கள் கூறுகின்றன. அவை புத்தியுத்தமான தெளிவுகளையும் முன் வைக்கின்றன. இன்று நம் வாழ்க்கை முறைகளை ஒழுங்குபடுத்திக்கொள்ள சுய அறிவு, தன்னறிவு மனிதனின் பூரண வளர்ச்சிக்குத் தேவை என்று ஆன்மிக பெரியோர்கள் கூறுகின்றனர்.

முக்கியமாக நாம் எல்லாரும் தனித்தன்மை பெற்றவர்கள் அந்த வழிலேயேதான் செல்வோம் என்று நமக்குள் ஒரு சபதம்.ஆனால் நமக்குள் இருப்பதோ அகம்பாவம் தான், அந்த அகம்பாவத்தை அடக்கி எல்லாவிதமான அடிமை தனத்திலிருந்து நம்மை விடுவித்து நிம்மதியாக வாழ கண்டிப் பாக வழி உண்டு.


இதை மிக அருமையாகவும், எளிமையாகவும் ஸ்ரீ எக்டேஸ்வரர் என்ற ஞானி கிரியாயோகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

The eight bondages or snares are hatred, shame, fear, grief, condemnation race prejudice, pride of family and smugness.Removal of the eight bondages leads to magnanimity of the Heart. Shri Yukesh war, Hinduism,Kriya Yoga.

சுருக்கமாகச் சொல்லப்போனால் மனிதனின் இதய துடிப்பு நின்று போனால் வாழ்க்கை முடிகிறது. இந்த குறுகிய வாழ்க்கையில் நல்லது செய்து நற்பெயர் பெற்று செல்லுங்கள் என்பது தான், ஆன்மிக கருத்து.

இதை புரிந்து கொண்டால் எந்த மனிதனும் தவறு செய்யமாட்டான். அது தான் மிகவும் கடினம்!

# கோலமிகக் காட்டும் கோலவழி அம்மன்



கயிலையில் பிறக்க முத்தி எனத் தொடங்கி முத்தி தரும் தலங்களை முதன்மைப் படுத்துகிறது ஓர் பழமொழி, கயிலையை அனைய பதிகள் தென் தமிழ் நாட்டில் பல உள்ளன என்றாலும் தனிச்சிறப்புமிக்க பூலோகக் கயிலையாக இருப்பது மயிலை என்னும் மயிலாப்பூராகும். அன்பர்கள் மயிலையே கயிலை! கயிலையே மயிலை என்று இரண்டையும் ஒன்றாகவே கொண்டாடுகின்றனர்.

தொன் மயிலை என்று சேக்கிழாரால் புகழப்பட்ட மயிலாப்பூரின் நடுவில் கற்பகவல்லி உடனாய கபாலீசுவரர் கோயில் விளங்கிவருகிறது. இந்த மயிலையின் ஆதித் தெய்வமாகவும். ஊர்ப்பிடாரியாகவும் வீற்றிருந்து அன்னை கோலவிழி அம்மன் அருள்பாலித்து வருகிறாள்.

பெரிய சிவாலயங்கள் அமைந்துள்ள தலங்களில் காளிவழிபாடும் தனிச்சிறப்புடன் திகழ்ந்து வருகிறது. அவ்வகையில் மயிலாப்பூரிலும் காளி வழிபாடு சிறப்புடன் உள்ளது. இங்குள்ள காளி தேவி கோல விழியாள் என்ற திருப்பெயருடன் அருள்பாலிக் கின்றாள்.

இவள் ஆதியில் உக்ர மாகாளியாக விளங்கிவந்தாள். உயர்ந்த மேடைமீது வலதுகால் குத்திட்டு இடதுகாலைத் தொங்கவிட்டுக் கொண்டு அமர்ந்திருக்கிறாள். தொங்கவிட்ட காலின் கீழ் அசுரன் நிசும்பன் வீழ்ந்து கிடக்க அவனை மிதித்துக் கொண்டிருக்கிறாள்.

எட்டு கரங்கள் கொண்டு அவற்றின்

வலப்புறம் சூலம், வாள், உடுக்கை வேதாளம் ஆகியவற்றையும் இடப்புறம் கேடயம், அங்குசம், மணி, கபாலம் ஆகியவற்றையும் தாங்கியுள்ளாள்.

காதில் பிரதே குண்டலம் திகழ தலைமீது அழல்முடி தரித்துள்ளாள். 15 தீ நாக்குகளுடன் திகழும் அம்முடிமீது சீறிச் சினந்து நிற்கும் பாம்பு, சந்திரன், மண்டையோடு ஆகியவற்றைத் தரித்திருக்கின்றாள்.

இவளுடைய நாக்கு வெளியே நீண்டு தொங்கிக் கொண்டிருந்தது. இது பார்ப்பவர்களுக்கு அச்சமூட்டுவதாக இருந்தது. மேலும் இடைக்காலத்தில் பல மந்திரவாதச் செயல்களுக்கு இக்கோயில் நிலைக் களனாகி விட்டதால் பக்தர்கள் செல்ல அஞ்சினர். கோயில் ஆளரவற்று புதர் மண்டிவிட்டது.

பக்தர்கள் விடாமுயற்சியுடன் கோயிலை பழுதுநீக்கி புதுமைப்படுத்தி திருப்பணி செய்தனர்.

உரிய மந்திரச் சடங்குகளைச் செய்து அழகிய முகம் கொண்டவளாக சாந்த நிலைக் காளியாக இவளை மாற்றி மக்கள் வழிபட வகை செய்தனர். அது முதல் கோயில் தனிப்புகழ் பெற்று அருட் தலமாக விளங்கிவருகிறது.

''பத்ர'' என்பதற்கு காத்து நிற்பது என்பது பொருள் நம்மை மந்திர, தந்திர, யந்திர, பூத, வேதாள பைசாசம் முதலான தீய சத்திகளிடமிருந்து காத்து நிற்பதால் பத்ரகாளி என்று அழைக்கப்படுகிறாள் இவளுடைய கோலத்தை சோழர்கள் நீசும்பசூதனி என அழைத்தனர்.

மயிலையில் குளிர்மலை அம்மன் என்றும் கொண்டாடுகின்றனர்.

இவள் அகன்ற விழிகளுடன் திகழ்கிறாள். பார்ப்பவர்களின் மனோநிலைக்கேற்ப குழந்தையாகவும் இளம் பெண்ணாகவும். புன்சிரிப்புடனும் காட்சியளிக்கிறாள். இதை அண்மைக் காலத்துப் பாடல் ஒன்று கோலமிகக் காட்டும் கோலவிழித்தாயே என்று கொண்டாடுகிறது.

திருமணப்பேறு விரைவில் கூடவும், குழந்தை குட்டிகளுடன் வளமான வாழ்வு பெறவும்.

உடல் நலம் பெறவும் மக்கள் நேர்ந்து கொள்கின்றனர். அவற்றைத் தீர்த்துவைக்கும் கண்கண்ட தெய்வமாக கோலவிழி அம்மன் விளங்கி வருகின்றாள்.

இவளுக்கு நேர்ந்து கொண்ட அன்பர்கள் அச்செயல் வெற்றி பெற்ற பின் தைலக்காப்பு மஞ்சள் காப்பு , எலுமிச்சம் பழமாலை சார்த்துதல் முதலியவற்றைச் செய்கின்றனர். மஞ்சள் காப்பில் அம்பிகையைத் தரிசிக்கக் கண் கோடி வேண்டும்.

இக்கோயிலில் ஆண்டுதோறும் மாசிமாதம் 3வது ஞாயிற்றுக்கிழமையில் 1008 பால்குட விழா, கொண்டாடப்படுகிறது. கபாலீசுவரர் கோயிலில் இருந்து 1008 பால் குடங்களைச் சுமந்தவாறு பக்தர்கள் மேளதாளம் ஆட்டம் பாட்டத்துடன் ஊர்வலமாக சென்று அம்பிகைக்கு அபிஷேகம் செய்கின்றனர். அன்றிரவு சிம்ம வாகனத்தில் அம்பிகை பவனி வருகிறாள்.

அமாவாசை, பௌர்ணமி நாட்களில் ஊஞ்சல் உற்சவம், சித்ராபௌர்ணமியில் பூச்சொறிதல் ஆடிப்பூரம், புரட்டாசி நவராத்திரி ஆகியன சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன.

கருவறையில் பெரிய சுதைச் சிற்பமாக கோலவிழி அம்மன் அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றாள். சிறப்பு அலங்காரம், எலுமிச்சம்பழ மாலை சாற்றுதல் முதலியவற்றில் அம்பிகை கம்பீரத்துடன் விளங்குகிறாள்.

அனைத்து அபிஷேகங்களும் உலாத் திருமேனிக்கே செய்யப்படுகின்றன. அரசும், வேம்பும் இணைந்து வளர்ந்துள்ளது. அதன் கீழ் விநாயகர் வீற்றிருக்கின்றார் வேப்பமரத்தின் கீழ் நாகதேவதைகள் உள்ளன.

ஆஞ்சநேயர், சப்தமாதர்கள் சந்நிதிகளும் துவார விநாயகர், துவார சுப்பிரமணியர் சந்நிதிகளும் உள்ளன. கருவறைக்கு நேர் எதிரில் சிம்மவாகனம் உள்ளது. இக்கோயிலில் நடனமாடும் காளி சிலை ஒன்றும் உள்ளது.

இக்கோயில் அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்துடன் இணைந்தகோயிலாகும்.

குறைகளை களைந்து வாழ்வின் நிறைவான இன்பம் தரும்.

கோலவிழியாளை வணங்கி

அருள்பெறுவோம்!




இளையான்குடிமாற நாயனார்- ஆவணி - பூரம்



செருத்துணை நாயனார் - ஆவணி - பூசம்

# ஆவணியில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள்



புகழ்த்துணை நாயனார் - ஆவணி - ஆயில்யம்



அதிபத்த நாயனார் - ஆவணி - ஆயில்யம்



குங்குலியக்கலய நாயனார் - ஆவணி - மூலம்





ஆடிக்கிருத்திகை பெருவிழாவிற்கு, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலிருந்து சீர்வரிசை கொண்டுவரப்பட்டது






திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆடிக்கிருத்திகை - தெப்பத்திருவிழாவில் மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். உடன், இந்துசமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு. ந. பிச்சாண்டி.இ.ஆ.ப., அவர்கள் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. மு. ஈஸ்வரப்பன், அவர்கள், இணைஆணையர் / செயல் அலுவலர் திரு. ப. தனபால் அவர்கள்.

அறங்காவலர்கள் திரு. க. பாலகிருஷ்ணன், திரு. ந.வே. சக்கரப்பன் திருமதி. கா. உஷாரவி, திரு. மு. நாகன் ஆகியோரும் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. மு. ஈஸ்வரப்பன் மற்றும் இணைஆணையர் / செயல் அலுவலரும் விழா ஏற்பாடுகளை சிறப்புற செய்திருந்தனர். (நாள்: 27.7.2008)











காவடி எடுத்து ஆடிவரும் பக்தர்கள்



# விதைத்தவுடன் விளைவித்த தீர்த்தனகிரி நாதன்!

நான்கு யுகங்கள் கண்ட சுயம்பு மூர்த்தி - சுந்தரரால் பாடல் பெற்ற நடுநாட்டுத் தலம் - ஒரே நாளில் விதைத்த தினை விளைந்த பூமி - பூதர்கள் இசைக் கருவிகள் இசைக்க நடராஜர் நடனமாடும் கோயில் - பல்லவர், சோழர், பாண்டியர் ஹோய்சாலர், விஜயநகர மன்னர்கள் என பலராலும் திருப்பணி செய்யப்பட்ட திருக்கோயில் - முகலாயர் படையெடுப்பின் தாக்கத்தை சந்தித்த தலம் - அபூர்வ கல்வெட்டுக்கள் கொண்ட ஆலயம் - கிருஷ்ண தேவராயர் தங்கியிருந்து தானங்கள் வழங்கிய ஊர் எனப் பல்வேறு பெருமைகள் கொண்ட திருத்தலமாக விளங்குவது தீர்த்தனகிரி எனப்படும் திருத்தினை நகர் சிவக்கொழுந்தீசுவரர் திருக்கோயில் ஆகும்.

**தினை விளைந்த அதிசயம்**

திருத்தினை நகரில் பெரியான் எனும் விவசாயி வாழ்ந்து வந்தான். சிவத் தொண்டில் சிறந்து விளங்கிய அவன், அன்றாடம் ஒரு சிவனடியாருக்காவது உணவு படைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அப்பணியைச் செம்மையாகச் செய்துவந்ததால் இறைவன், தன் பக்தனான பெரியானை பெருமைப்படுத்த விரும்பினார். ஒரு நாள் வயலை உழுது கொண்டிருந்தபோது சிவனடியார் வேடம் (ஜங்கமர்) பூண்ட அவனிடம் சென்று தனக்கு கடும் பசி என்றும் ஏதேனும் உணவு வேண்டும் என்றும் கேட்டார்.

அவரைச் சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும்படிக் கூறிவிட்டு வீட்டிற்குச் சென்றான், மனைவியிடம் கூறினான் ஏழ்மை நிலை என்றாலும், அவரை பசியாற்ற விரும்பிய பெரியான், தன்னிடம் அன்று விதைக்க இருந்த தினையை எடுத்துச் சமைத்து தன் மனைவியோடு வயலுக்கு வந்தான். அப்போது அதிசயமாக வயலில் தினை விளைந்து அறுவடைக்கு காத்திருந்தது கண்டு வியப்படைந்தான். என்றாலும் அதில் மனம் ஒன்றவில்லை. அடியவர் பசித்திருப்பாரே என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. அவரைத் தேடி அலைந்தான். அப்போது இறைவன் சோதி வடிவில் தோன்றினார். அந்த தம்பதியர்க்கு இறைவன் காட்சி தந்து அருள் வழங்கினார். இதைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து கொண்டாடினர்.

விதைத்தவுடன் தினை விளைவித்த ஊர் என்பதால், அன்றுமுதல் அவ்வூர் திருத்தினை நகர் என அழைக்கப்பட்டதாக கூறுவர். இவ்வூரே தற்போது தீர்த்தனகிரி என அழைக்கப்படுகின்றது. இதை விளக்கும் ஐதீகக் காட்சிகள் கருவறையின் தென்புறச் சுவரில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன.

**வீரசேனன் - ஜாம்பவான்**

ஒருசமயம் வீரசேனன் என்ற மன்னனின் தந்தைக்குப் பிரமஹத்தி தோஷம் பிடித்தது. பல்வேறு திருத்தலங் களுக்குச் சென்றும் அது

நீங்கவில்லை முடிவில் இந்த இடத்தில் அத்தோஷம் நீங்கியது.



அம்மன்னன் வேட்டைக்குச் சென்ற போது, திருத்தினை நகரில் உள்ள ஒரு குளத்தில் பெருநோயால் பாதிக்கப் பட்ட நாய் ஒன்று வீழ்ந்து எழுந்தபோது, அதன் நோய் நீங்கியது கண்டு வியப் படைந்தான். உடனே அக்குளத்தினைத் தூர்வார உத்திரவிட நடராஜர் மற்றும் சிவகாமியின் பஞ்சலோக சிலைகள் கிடைத்தன. கூடவே வானில் அசரீரி கேட்டது. அதன்படியே ஒரு சிவாலயம் எழுப்பப்பட்டது. அதுவே திருத்தினை நகர் சிவாலயம் ஆகும்.

இதேபோல் கரடிகளின் அரசனான ஜாம்பவானும் இத்தலத்தினை வழிபட்டு பேறு பெற்றுள்ளான்.

**கல்வெட்டுச் சான்றுகள்**

இந்திய தொல்லியல் துறையினர் கி.பி.1904ல் இக்கோயிலில் களப்பணி மேற்கொண்டு ஒன்பது கல்வெட்டுக்களைப் படியெடுத்துள் ளனர்.

இக்கல்வெட்டுகளின் மூலம் இறைவன் பெயர் சிவாங்குரேசன் (இது வடமொழியாகும். தமிழ் சொல் வடிவம் சிவமுளையப்பர் - சிவக்கொழுந்து) என்றும் தலத்தின் பெயர் திருத்தினை நகர் என்றும் அறிய முடிகின்றது.

விருதராச பயங்கர வளநாட்டு, மேற்காநாட்டு ஜெயங்கொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்து திருத்தினை நகர் என இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தலத்தில் கார்கோட பல்லவன் (கி.பி.12 ஆம் நூற்றாண்டு), கோனேரிக் கொண்ட சோழன் (கி.பி.1181-2), பராக்கிரவர்மன் (கி.பி.1194-5), இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் (கி.பி.1252-3) இரண்டாம் மாறவர்மன் விக்ரமபாண்டியன் (கி.பி.1253-1263), முதலாம் சுந்தரபாண்டியன் (கி.பி.1265), ஹோய்சல மன்னன் (கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டு), விஜய நகர மன்னன் கிருஷ்ணதேவராயன் (கி.பி.1517-18) எனப் பல்வேறு மன்னர்களும் திருப்பணி செய்து வணங்கி வழிபட்டதை இங்குள்ள கல்வெட்டுகள் நமக்கு அறிவிக்கின்றன.

**கிருஷ்ணதேவராயர் கொடைகள்**

திருத்தினை நகரில் தங்கியிருந்த கிருஷ்ணதேவராயர், திருக்காட்டுப்பள்ளி, திருநகரி, திருநாங்கூர், திருமாணிக்குழி, திருவயிந்தபுரம், திருப்பாதிரிப்புலியூர், கொடுக்கை, தியாகவல்லி, திருநாவலூர், திருக்கொடிகா, திருச்சொன்னபுரம், திருக்குறையலூர், திருவெழுந்தூர், திருப்பறிய லூர், திருமுட்டம் என பல்வேறு சைவ, வைணவ ஆலயங்களுக்கு கொடைகள் வழங்கிய செய்தி விரிவாக குறிப்பிடப் பட்டுள்ளது.

**கருவாடு வரி:** இதேபோல இப்பகுதியில் கொண்டு செல்லப்படும் கருவாடுகளுக்கு வரி விதிக்கப்பட்ட விவரமும் தெரிய வருகிறது.

**இறைவன் - இறைவி:** மன்னர்கள் காலத்தில் இறைவன் பெயர் சிவாங்குரேஸ்வரன் என்று அழைக்கப் பட்டாலும் இன்றைய பெயர் சிவக்கொழுந்தீஸ்வரன் இறைவியின் பெயர் ஒப்பிலாநாயகி, கருந்தடங்கண்ணி. பங்குனி மாதத்தில் 26, 27, 28 ஆகிய மூன்று

நாட்களில் சூரிய கதிர்கள் இறைவன் மீது விழுவது குறிப்பிடத்தக்கது. இறைவன் கிழக்கு முகமாய் காட்சி தர, இறைவி வெளிப்பிரகாரத்தில் தென் திசையை நோக்கி தனிச் சந்நிதியில் காட்சி தருகின்றாள்.



**ஆலய அமைப்பு:** அகன்று பரந்த மூன்று நிலை ராஜகோபுரம் பிரமாண்டமான தோற்றத்தில் நம்மை வரவேற்கின்றது. அதன் அருகே அம்மன் சந்நிதி அமைந்துள்ளது. கருவறை சுற்றுப்புறத்தில் யோக தட்சிணாமூர்த்தி, வலம்புரி விநாயகர், அருகே ஸ்தல வரலாற்றை விளக்கும் புடைப்புச் சிற்பங்கள் காட்சி தருகின்றன.

அபூர்வ நடராஜர் கோலம் கருவறை முன் மண்டபத்தில் இடது புறத்தில் அமைந்துள்ளது. கோயிலின் இடதுபுறம் திருக்குளம் அமைந்துள்ளது

**மூவர் பாடிய தலம்:** நடுநாட்டு தேவார தலங்களுள் இது ஐந்தாவது தலமாக திகழ்கின்றது. சுந்தரரின் பதிகம் பெற்றதலம் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் பாடியுள்ள செய்தி பெரிய புராணம் பாடல் மூலம் தெரிய வருகிறது. என்றாலும், அவை இதுநாள் வரை கிடைக்கப் பெறவில்லை.

இத்தலம் முக்தி தரும் என்பது ....... **முக்தியாவது பரகதிப்பயனே.......** என்ற சுந்தரரின் பாடல் வரிகள் மூலம் உறுதியாகின்றது.

**விழாக்கள்:** வழக்கமான விழாக்களுடன் வைகாசி விசாகத்தன்று தேர் திருவிழாவும், அனுஷத்தில் தீர்த்தவாரியும் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன.

**தரிசன நேரம்:** காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரை. மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் ஆலயம் திறந்திருக்கும். பௌர்ணமி நாளன்று இக்கோயிலை சுற்றி வருவது சிறப்பானதாகக் கருதப்படுகிறது. தீர்த்தம் ஜாம்பவான் தீர்த்தம் எனும் திருந்து தீர்த்தம். தல விருட்சம் கொன்றை மரம்.

**அமைவிடம்:** கடலூர் மாவட்டம், கடலூர் வட்டத்தில் அமைந்துள்ள ஊர் தீர்த்தனகிரி. கடலூரில் இருந்து தெற்கே 18 கி.மீ., சிதம்பரத்தில் இருந்து வடக்கே 35 கி.மீ., தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. கடலூரில் இருந்து 4, 22, 25, 31 மற்றும் 32 ஆகிய எண் கொண்ட பேருந்துகள் இவ்வூருக்குச் செல்கின்றன.

கடலூரில் இருந்து சிதம்பரம் செல்லும் சாலையில் சுமார் 18 கி.மீ., பயணம் செய்தால் ஆலப்பாக்கம் ரயில் நிலையம் வரும். அவ்வூரைத் தாண்டி நெடுஞ்சாலையில் சென்று புதுப்பாளையம் என்ற ஊரின் மேற்கே செல்லும் சாலையில் 5 கி.மீ., இயற்கையான வயல்களுக்கு நடுவே பயணம் செய்து தீர்த்தனகிரியை அடையலாம். இவ்வூரின் வடகிழக்கே உள்ள ஆலப்பாக்கம் ரயில் நிலையத்தை அடுத்து திருச்சோபுரம் (தியாகவல்லி) என்ற தேவார தலமும் அமைந்துள்ளது. இயற்கையை விரும்புவோரும், இறைவனை விரும்புவோரும் அவசியம் தரிசித்து மகிழ வேண்டிய தலம் தீர்த்தனகிரியாகும்.

**படமும், படைப்பும்**
**பனையபுரம் அதியமான்.**

# சமரசம்

சமரசம் என்றால் சிறந்த ஞானிகளின் திருவுள்ளத்தில் எழுந்த சமநோக்கு என்பது ஆகும். சமரசம் என்றால் எல்லாப் பொருள்களும் ஒருபோதும் ஒன்றாகமாட்டா, பொருள்களில் ஏற்றத் தாழ்வு எக்காலத்திலும் எவ்விடத்திலும் உண்டு. மேடு - பள்ளம் அறிஞன் - மூடன், சந்தனம் - சாணம், தட்பம்-வெப்பம், மேல்-கீழ், நன்மை-தீமை இப்படிப் பொருள்களில் வேற்றுமையுண்டு.

இந்த வேற்றுமை அருள் பழுத்த மெய்ஞ்ஞானிகளுக்குத் தோன்றுவதில்லை. அவர்கட்கு எல்லாம் ஒன்றாகவே தோன்றும், இதற்கு ஒரு உவமை கூறுகின்றேன்.

பழநி மலைக்கு ஒருவன் சென்றான். அடிவாரத்தில் சிறிய வீடு பெரிய வீடு, ஓரடுக்கு மாடி, ஈரடுக்கு மாடி, மூன்றடுக்கு மாடிகள் இருக்கின்றன. நிலத்தில் நின்று பார்த்தால் வீடுகளின் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. மலையேறிப்பார்க்கின்ற போது அவன் கண்களுக்கு, எல்லாம் ஒன்றாகி விடவில்லை, மலைமீது ஏறி உயர்ந்தவனுக்கு ஒன்றாகித் தோன்றுகின்றன.



நிலத்தில் நடப்பவனுக்கு மேடு பள்ளம் தோன்றுகின்றன. விமானத்தில் பறந்து போகிறவனுக்கு நிலத்தில் மேடு பள்ளந் தோன்றுவதில்லை. எனவே நிலத்தில் மேடு பள்ளம் உண்டுதான். மேலே உயர்ந்து பறக்கின்றவனுக்கு மேடு பள்ளம் மறைந்து ஒன்றுபோல் தோன்றுகின்றன.

இதுபோல் தம்மைத்தாமே உயர்த்திக்கொண்ட தவஞானிகட்கு உலகில் உள்ள வேற்றுமைகள் மறைந்து ஒழிகின்றன. எல்லாம் சமமாகக் காட்சி தருகின்றன.

ஞானிகட்கு நிந்திக்கின்றவனும், வந்திக்கின்றவனும், ஏழையும் செல்வந்தனும், சந்தனமும், சாணமும், நீற்றத்தையும் தாமரைத் தடாகமும், இரத்தின மணிகளும் பருக்கைக்கற்களும், கற்கண்டும் எட்டிப் பழமும் ஒன்றாகிவிடுகின்றன.

இதனால் பொருள்கள் ஒன்றாகி விடவில்லை, சந்தனஞ் சந்தனந்தான். சாணஞ் சாணந்தான். சந்தனம் சாணமாகி விடாது. சாணம் சந்தனமாகிவிடாது.

ஞானமலைமீது நிற்கும் அருளாளர்க்கு அவைகள் ஒன்றாகி விடுகின்றன என்று நீவிர் உணர்தல் வேண்டும்.

**''கேடும் ஆக்கமும்**
**கெட்ட திருவினார்**
**ஓடும் செம்பொனும்**
**ஒக்கவே**
**நோக்குவார்''**

என்ற பெரிய புராணத் திருவாக்கை உற்று நோக்குங்கள்..

மற்றொரு உவமையுங் கூறுகின்றேன். ஒரு தாய்க்கு நான்கு மக்கள் மூத்தவன் நன்றாகப் படித்து கலெக்டர் உத்தியோகம் பார்க்கிறான். அந்த மாவட்டத்துக்கே தலைவனாகி மாதம் ஒன்றுக்கு இரண்டாயிரம்.

இரண்டாவது மகன் படியாத தடி மாடாகத் திரிந்து தக்க சிபார்சு செய்யப் பில்கலெக்டர் வேலை பார்க்கிறான். மாதம் அறுபதுரூபாய்

ஊதியம் பெறுகின்றான். மூன்றாவது மகன் சிறுகடை வைத்து சிறிய வருவாய் பெறுகின்றான். நாலாவது மகன் திருடு சூதுவாது வஞ்சனை பொய் முதலிய அணிகலன்களை யணிந்து கடும் வெய்யிலில் கைவண்டியிழுத்துப் பிழைக்கின்றான். இந்த நால்வர்களில் எத்துணை வேற்றுமை! சங்கராந்தி தீபாவளி முதலிய நன்னாள்களில் நால்வரும் தாயாரிடம் வந்தார்கள். பெற்றதாய் கலெக்டரையும், கடைக்காரனையும், கைவண்டியிழுப்பவனையும் ஒன்றுபோல் அன்பினால் நோக்கி, ஒன்றாக அமர்த்தி ஒன்றுபோல் அன்னம் படைத்து நெய்விட்டு உபசரிக்கின்றாள். அந்த நால்வரும் ஒன்றாகிவிடவில்லை.

நிரம்ப அவர்களுக்குள் பெருமை சிறுமையிருக்கின்றன. ஆனால் கருணையுள்ளம் படைத்த அன்னை ஒன்றாகச் சமரசமாக அருள்புரிகின்றாள் கலெக்டரை மேஜை மீது அமர்த்தியும், வியாபாரியை நடையில் வைத்தும், கைவண்டி யிழுக்கும் கடைசி மகனைத் தெருத்திண்ணைமேல் வைத்துமா அன்னம் படைக்கின்றாள். கலெக்டருக்கு ஒரு கரண்டி நெய், வியாபாரம் புரியும் மகனுக்கு ஒண்ணரைக்கரண்டி நெய், கைவண்டியிழுக்கும் பிள்ளைக்குக் கால் கரண்டி நெய்யாவிடுகிறாள்? இல்லை, இல்லை; எல்லோரையும் சமரசமாகப் பார்த்து ஒன்றுபோல் நெய்விடுகின்றாள் அன்னை.

அதுபோல் அன்னையினும் தயவுடைய அருளாளர்கட்கு இவன் கீழ்க்குலத்தான். இவன் மேற்குலத்தான். இவன்கற்றவன், இவன் கல்லாதாவன், இவன் வறியவன், இவன் தனவந்தன், இவன் நல்லவன், இவன் தீயவன் என்ற பேத ஞானம் போய் எல்லாம் ஒன்று என்ற அபேத ஞானம் எய்துகின்றது.

படக்காட்சி, கடற்காட்சி, வனக்காட்சி நந்தவனக் காட்சி, மலைக்காட்சி, பொருட்காட்சி என்று பல காட்சிகள் உண்டு. அருட்காட்சியுடையவர்கள் எல்லாவற்றையும் ஒன்றாகக் கண்டு மகிழ்கின்றார்கள். இதனை ஒளவைப் பிராட்டியார்.

**''ஒன்றாகக் காண்பதுவே மாட்சி''** என்கிறார்.அருள்ஞானிகட்குச் சாதிவேற்றுமை, சமய வேற்றுமை நிறவேற்றுமை, மொழி வேற்றுமை முதலிய சகல வேற்றுமைகளும் தோன்றமாட்டா, ஒரே சமரச ஞானம் தோன்ற அகில உலகங்களையும் ஒன்றாகக் காண்பார்கள்.

அருணகிரிநாத சுவாமிகள் சிவயோகத்தைப் பற்றி தெளிவாக திருப்புகழில் கூறியிருக் கின்றார்.

சுவாமிகள் அருளிச் செய்தது பதினாறாயிரம் பாடல்கள். இப்போது கிடைத்திருப்பது ஆயிரத்து முந்நூற்றுப் பதினொன்று. இந்தப் பாடல்களில் அடியில் வரும் அமுதப் பாடல் மிகவுயர்ந்ததும் சிவயோகத்தை மிகத் தெளிவாகக் கூறுகின்றார் இப்பாடலில்.

**''ஐந்து பூதமு ஆறு சமயமும்**
**மந்த்ர வேதபுராண கலைகளும்**
**ஐம்பதோர் வித மான லிபிகளும்**
**வெகுருப**

**அண்டராதி சராச ரமும் உயர்**
**புண்டரீகனு மேல நிறவனும்**
**அந்தி போலுரு வானும் நிலவொடு**
**வெயில்காலும்**

**சந்த்ர சூரியர் தாமும் அசபையும்**
**விந்து நாதமும் ஏகவடிவம் அ**
**தன்சொரூபம் தாக வுறைவது**
**சிவயோகம்**

மண் கடினமானது, புனல் தட்பமானது, கனல் வெப்பமானது, இப்படி மாறுபட்ட ஐம்பெரும் பூதங்களும் ஞானிகட்கு ஒன்றாகத் தோன்றும்.

சைவம், வைணவம், காணாபத்யம், கௌமாரம், சாக்தேயம், சௌரம் என்ற ஆறு சமயங்களும் அவர்கட்கு ஒன்றாகத் தோன்றும்.

ஏழுகோடி மந்திரங்களும், பதினெட்டுப் புராணங்களும் அறுபத்து நான்கு கலைஞானங்களும், அகராதி க்ஷகாராந்தமாக அமைந்துள்ள ஐம்பத்தொரு அட்சரங்களும், பற்பல வடிவங்களுடன் கூடிய தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன முதலிய அசையாத உயிர்களும், பிரமனுந் திருமாலும் உருத்திரனும் குளிர்ந்த சந்திரனும் வெப்பமான சூரியனும், அஜபா நலமும் ஆகிய அனைத்தும் ஒன்றாகக்

கண்டு அருள் வெளியிலே சலனமற்று நிற்கும் ஞானநிலையே சிவயோகம் எனப்படும்.

''கண்டாருங் கிடையாது விண்டாருஞ்
சொன்னதில்லை
அண்டரண்ட கோடி யெல்லாம் ஒன்றாய்
சமைந்திருக்கும் அல்லவோ?''

இதை எழுதுவதோ, - பேசுவதோ மெத்தக்கடினம் என்று கூறுகின்றார் கோபால கிருஷ்ண பாரதியார்.

சிவஞானிகட்குக் குற்றம் குணம் எல்லாம் சிவமாகவே தோன்றும்.

''குற்றம் நீ குணங்கள் நீ கூடலால
வாயிலாய்
சுற்றம் நீ பிரானு நீ தொடர்ந்திலங்கு
சோதி நீ
கற்றநூல் கருத்தும் நீ அருத்தம் இன்பம்
என்றிவை
முற்றும் நீ புகழ்ந்து முன் உரைப்பதென்
முகம்மானே!''

என்று அருளிச் செய்கின்றார் திருஞானசம்பந்தர்.

இராமனுடைய அருட்பார்வை பெற்று அறியாமை நீங்கப் பெற்று உணர்வு பெற்ற வாலி கூறுகின்றான்.

''ஏவுகூர் வாலியால் எய்து நாயடிய னேன்
ஆவிபோம் வேலைவாய் அறிவு தந்து
அருளினாய்
மூவர் நீ முதல்வன் நீ முற்றும் நீ மற்றும் நீ
பாவம் நீ தருமம் நீ பகையுறு நீ உறவு நீ''

எனவே இறையருளால் திருவருள் ஞானம் பெற்ற ஆன்றோர்கள் எல்லாவற்றையும் ஒன்றாக வைத்துப் பார்க்கின்றார்கள்.

இதுவே சமரசம் எனப் பெறும்: எங்கும் சமரச ஞானம் ஓங்குக.

## விநாயக புராணமும் இராமாயணமும்

ஸ்ரீகச்சியப்ப முனிவர், விநாயக புராணத்தை அரங்கேற்றிய பின்னர், தொடர்ந்து நாள்தோறும் அப்புராணத்தை விளக்கிக் கூறி வந்தார். இராமாயணத்தில் மிகுந்து பற்றுக் கொண்ட ஒருவம் கேட்க வருவது வழக்கம். அவர் இது என்ன இராமாயணமா என்று கேட்டு அதை இகழ்ந்தார்.


அதையறிந்த கச்சியப்ப முனிவர் அவர் புராணம் கேட்க வந்தபோது இராமாயணத்தை எடுத்துக் கொண்டு முதல் ஆறு செய்யுளில் நூறு குற்றங்களைக் காட்டினார். அதைக் கேட்டு எல்லோரும் முனிவரின் அறிவுத் திறனைக் கண்டு அஞ்சினர். குறை கூறியவர் அஞ்சி நடுங்கி விட்டார். தமது குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டியதுடன், நூறு வராகனையும் பட்டு பீதாம்பரங்களையும் அளித்தார். முனிவர் அவரிடம் வருந்த வேண்டாம் எனக் கூறி அந்தக் குற்றங்கள் குற்றங்கள் அல்ல என்றும், இலக்கண வழியில் சரியானதே என்றும் பெரிய சொற்பொழிவை நிகழ்த்தினார்.

அந்தச் சொற்பொழிவு இராமாயண சங்கை - உத்தார விருத்தியுரை என்னும் பெயரில் வெளிவந்துள்ளது.

## உடனாய - உடனுறை எது சரி?

சிவபெருமானையும் அம்பிகையையும் பிரிக்க இயலாது. சிவன் மாதொரு கூறன். எனவே உடனுறை என்ற பதப்பயன்பாடு சரியில்லை. உடனாய என்ற பதப் பயன்பாடுதான் சரி. உடன் உறை என்றால் எத்தனை நாளாக உடன் உறைகிறார்கள்? எப்போது விலகிப் போவார்கள்? அல்லது எப்போதாவது விலகிப் போவார்களா? என்றெல்லாம் கேள்விகள் எழும், உடன் உறை என்றாலே இரண்டும் வெவ்வேறு என்று பொருளாகிவிடும்.. எனவே பாகம் பிரியாளான அம்பிகையை உடனாய என்று கூறுவதே சரி.

# ஆலய வழிபாட்டில் ஆனைகள்



பாரத நாட்டின் பாரம்பரியமிக்க வழிபாட்டுப் பொருள்களின் வரிசையில் யானைகள் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளன. இவை அறிவாலும் ஆற்றலாலும் வடிவாலும் பெரிய விலங்கு ஆகும். சனாதன தர்ம, பௌத்த, ஜைன சமயங்கள் அனைத்தும் யானைகளைப் போற்றுகின்றன.

அரசர்களுக்கு உரிய முதன்மைச் சின்னங்களில் யானையும் ஒன்றாகும். அரசர்கள் தங்களது பிறந்த நாளில் யானை மீது பவனி வந்தனர். அரசனின் யானை பட்டத்து யானை என்றழைக்கப்பட்டது. அது முகபடம், மத்தக மணிகள், கழுத்து மணிகள் முதுகில் பட்டாடை கொம்புகளில் மணிகள் இழைத்த குமிழ்கள் காதுகளில் வெண்சாமரைகள் என்று வனப்புடன் பகட்டாகப் பளபளப்புடன் திகழ்கிறது. அதற்கென தனிப் பெயரும் சூட்டப்பட்டுள்ளது.


அரசர்கள் மாபெரும் பணிகளைச் செய்யவும், எதிரிகளை அடக்கி ஆளவும், மாபெரும் யானைப் படைகளை வைத்திருந்தனர். அவற்றின் எண்ணிக்கையின் அடிப்படையில் அவர்களது பலம் கணக்கிடப்பட்டது.

அரசனுக்குரிய குதிரை, யானை, தேர், காலாட்கள் என நால்வகை படைகளில் யானைப் படையே அதிக சக்தி கொண்டதாகும். பட்டத்து யானைகளைத் தினமும் பூசிப்பது வழக்கம். யானைகள் தெய்வீகம் கொண்டவைகளாக போற்றப்பட்டு வருகின்றன.

தெய்வ வழிபாட்டிலும் யானைகள் முதன்மை பெற்றுள்ளன. அனைத்து தெய்வங்களும் யானை மீது பவனி வருகின்றன. சிவ பெருமான் பவனி வரும் யானைக்கு ஐராவணம் என்பது பெயர். அதற்கு பக்கத்துக்கு ஆயிரம் தந்தங்கள் வீதம் இரண்டாயிரம் தந்தங்கள் உள்ளது என்று புராணங்கள் கூறுகின்றன. அந்த யானை மீது பவனி வந்து அமரலோகத்தை அரசு செலுத்த விரும்பாமல் இடப வாகனத்தில் ஏறி வந்து ஆரூரில் பெருமான் தியாகேசனாக வீற்றிருக்கின்றான். சுந்தரர் **"ஐராவணம் ஏறி அமரர் நாடாளாமல் ஆன்ஏறு ஏறி ஆரூர் ஆண்ட அரசு"** என்று போற்றுகின்றார்.

சிவாலயங்களில் இறைவனை ஆனை வாகனத்தில் வைத்து உலாவரச் செய்கின்றனர்.

அப்போது ஆனை மேல் அழகிய அம்பாரியில் பெருமானை அலங்கரிக்கின்றனர். மீயச்சூர் எனும் தலத்தில் சூரியன் ஆனை மீது சிவபெருமானையும் உமா தேவியையும் வைத்து வழிபட்டான் என்று தல புராணம் கூறுகிறது.



தமிழ் நாட்டில் மரத்தால் செய்து வண்ணம் தீட்டப்பட்ட ஆனை வாகனங்கள் வழக்கத்தில் உள்ளன. பெரிய தலங்களில் வெள்ளியால் செய்யப்பட்ட ஆனைகளும் சில தலங்களில் தங்க முலாமிட்ட யானைகளும் வாகனங்களாக உள்ளன.

பெருந்திருவிழாவில் ஆறாம் நாள் இரவில் யானை வாகனத்தில் அமர்த்திப் பெருமானை உலாவரச் செய்கின்றனர். ஆனை மீது அம்பாரியில் வெள்ளை ஆடை அணிந்து தலைப்பாகை அணிந்து கபாலீசுவரர் வரும் அழகே தனியானதாகும். இக்கோயிலில் பஞ்சமூர்த்திகளும் ஆனைகளின் மீது பவனி வருகின்றனர்.

ஐந்து ஆனைகள் வரிசையாக வருவது பரவசமூட்டும் காட்சியாகும்.

ஆதிநாளில் நிஜமான யானை மீது சுவாமியின் திருவுருவத்தை வைத்து பவனி வரச் செய்தனர். அதற்கேற்ப சுவாமியின் வடிவம் சிறியதாக அமைந்திருந்தது. கேரளாவில் இவ்வழக்கத்தை இன்றும் காணலாம். அங்கே யானைகளை வரிசையாக நிறுத்தி பவனி வரச் செய்கின்றனர்.

சோழர் காலத்தில் உற்சவ மூர்த்திகளைப் பெரியதாகச் செய்ததுடன் பெரிய அலங்காரங்களையும் செய்து மகிழ்ந்தனர். அதனால் மரத்தால் செய்த வாகனங்கள் வழக்கத்துக்கு வந்தன என்கின்றனர்.

ஆலய வழிபாட்டில் யானைகள் தனியிடம் பெற்றுள்ளன. அதிகாலையில் திருமஞ்சனத்திற்குத் தீர்த்தம் கொண்டு வருவதுடன் அதன் பணி தொடங்குகிறது.

அதையடுத்து கஜபூஜையில் யானையைப் பூசிக்கின்றனர். பெண் யானையே பூசைக்கு உரியது என்று சாத்திரங்கள் கூறுகின்றன. யானையின் முகத்திலும், பசுவின் பின்புறத்திலும் குதிரையின் முதுகிலும் லட்சுமி வாசம் புரிகிறாள் என்று நம்புகின்றனர். அதனால் ஆலயத்தில் இறைவன் சந்நிதியில் கதவைத் திறக்குமுன் பசுவைப் பின்புறம் காட்டியும், யானை முன்புறம் நோக்கியும் குதிரை பக்கவாட்டில் நிற்கும் படியும் செய்து பூசிக்கின்றனர். படுக்கையிலிருந்து எழுந்ததும் இவற்றின் முன்பாகக் கண் விழித்தால் யோகம் உண்டாகுமென்று சகுன சாத்திரங்கள் கூறுகின்றன. அதையொட்டி இவ்வழிபாடு நடைபெறுகிறது.

அதன் பிறகு ஸ்ரீபலி எனப்படும் சடங்கில் ஆனை மீது பெருமான் பவனி வந்து திசை பாலகர்களுக்கு அருளும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

முன்னாளில் இதற்கெனவே ஆலயங்களில் ஆனைகளை வளர்த்து வந்தனர். காலப்போக்கில் அவற்றைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் கடினமாக இருந்தால் அவ்வழக்கம் அருகிவிட்டது.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தருமபுரத்தில் இருபத்தேழு யானைகள் பாராமரிக்கப்பட்டு வந்ததைக் கண்டிருக் கிறோம். இப்போது சில திருக்கோயில்களில் மட்டுமே யானைகள் உள்ளன.

சிற்ப உலகிலும் யானைகள் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. ஆலயங்களுக்கு வருபவர்களை ஆண் யானையும், பெண் யானையும் இணைந்து நின்று வரவேற்பது அந்நாளைய வழக்கம். இதைக் குறிக்கும் வகையில் மண்டபத்தின் வாசற்படியில் இரு புறமும் யானைகள் அமைக்கும் வழக்கம் தோன்றியது என்பர்.

ஸ்ரீ விமானங்களை எட்டு யானைகள் வணங்கி நிற்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. மதுரையில் சோமசுந்தரப் பெருமாளின் கருவறையை எட்டு பிரம்மாண்ட யானைகள் தாங்குவதைக் காண்கிறோம். இவ்வளவு பெரிய யானை உருவங்கள் வேறெங்கும் இல்லை.





"திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோயில் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் ஆடித்தபசுத் திருநாள் 14.8.2008 அனைவரும் செல்வோம் இறையருள் அருள் பெருவோம்"



சென்னை, அருள்மிகு தீர்த்தபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான மனைப்பகுதிகளில் நீண்டகாலமாக குடியிருந்து வந்த கூட்டு ஆக்கிரமிப்பாளர்களை வாடகைதாரர்களாக வரன்முறைப்படுத்தி மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் உத்தரவுகளை வழங்கினார்.

# உலகம் உய்ய உதித்த உடையவர்

**பெ. ராமநாதபிள்ளை, செயல் அலுவலர், திருமூர்த்திமலை உடுமலை வட்டம்.**

ஆளவந்தார் திருநாடு எழுந்தருளிய பிறகு. அவருடைய சீடர்களும், சீடர்களில் சிறப்பு மிக்கவருமான பெரிய நம்பிகளும் ஒன்றுகூடி, ஆலோசனை செய்து ''தங்களுடைய தலைவராக ஸ்ரீ ராமானுஜர் இருக்க வேண்டும் என்பதை ஆளவந்தார் குறிப்பிட்டு காட்டிவிட்டார்'' என முடிவெடுத்து அரங்கன் ஆட்சிபுரியும் ஸ்ரீரங்கத்திற்கு ஸ்ரீராமானுஜரை அழைத்து வருவது எனவும், அப்பணியினை பெரியநம்பியே முடிக்கத் தகுதியுடையவர் என்றும் ஏகமாக முடிவெடுத்து, காஞ்சிபுரம் சென்று ஸ்ரீ ராமானுஜரை அழைத்துவர பெரியநம்பியைக் கேட்டுக் கொண்டனர்.

பெரிய நம்பியும் மிகவும் மகிழ்ந்து ஸ்ரீரங்கநாதரின் திருவடியினையும், ஆளவந்தாரின் திருவடிகளையும் மனம் கனிந்து வணங்கி, ஸ்ரீ ராமானுஜர் வாழ்கின்ற ஸ்ரீ காஞ்சிபுரம் நோக்கி சென்றார். அவருடைய தர்மபத்தினியும் உடன் சென்றார்.

பெரியநம்பியை குருநாதனாக ஏற்கவேண்டி ஸ்ரீரங்கம் வந்து கொண்டிருக்கும் ஸ்ரீராமானுஜரும், ஸ்ரீராமானுஜரை வைஷ்ணவ நெறி ஒளிவிட்டு பிரகாசிக்க ஸ்ரீ ரங்கத்திற்கு அழைத்துவர, காஞ்சிபுரம் சென்று கொண்டிருக்கும் பெரிய நம்பியும் அவருடைய தர்மபத்தினியும், மதுராந்தகம் என்ற புண்ணிய சேத்திரமாம் ஸ்ரீராமன் சந்நிதியில், ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டனர்.



பெரியநம்பியைக் கண்டதும் ஸ்ரீராமானுஜர் ''எம் தந்தையே சரணம்'' என்று வணங்கி, ''தேவர்களது சிந்தாமணி இன்று என்னிடத்தில் மனம் இரங்கி எனக்கு அருள்புரிக'' என துதிக்கவும், பெரிய நம்பியும், அழகிய அணையாத விளக்கு போன்ற இளையாழ்வாராகிய ஸ்ரீராமானுஜரை நோக்கி, ''ஆராய்ந்து இன்று உனக்கு பஞ்ச ஸம்ஸ்காரத்தை அளிப்பதற்காக வந்துள்ளேன்.

''எண்ணியன்று உனக்கது ஈவான்<br>
எய்தினேன் இளையாழ்வானே<br>
பண்ணிய பாவ முற்றும் படிமிசை<br>
அகல்லிற்றோங்கும்<br>
புண்ணிய கோடி என்றும்<br>
பொருவரும் விமானப்பாங்கில்<br>
நண்ணி முன் ஆளவந்தார் கணக்கு<br>
வைத்த''

''ஸ்ரீராமானுஜக வைபகம்(400)

என திருவாய் மலர்ந்தருளினார்.

தாயை கண்ட சேய் போல இராமானுஜர், அப்போதே அக்கணமே தம்மை சீராக ஏற்று உபதேசம் புரிய வேண்டினார். ''காஞ்சிபுரம் சென்று விடலாமே'' என கூறிய ஆசான் உரையை காதில் வாங்கிக் கொள்ளாமல், மாறாக ''யாருக்கு என்ன நேரும், எப்போது நேரும் என்று யாரால் சொல்லமுடியும்'' என்றும், மகிழம்பூ மாலையணிந்த நம்மாழ்வார், ''உடம்பு நிலையற்றது; மின்னலை போன்று

தோன்றி மறைவது என உடம்பு நிலையாமையைப் பற்றி (மின்னின் நிலையில் மன்னுயிராக்கையின் திருவாய்மொழி 1.2.2, குறிப்பிட்டிருப் பதாலும், மிகவும் மன்றாடி ''ஆளவந்தாரை இழந்தது போதாதா'' என கண்களிலே தாரை, தாரையாக கண்ணீர் சொரிய உண்மையே வடிவமாகிய மனத்தை உடைய இராமானுஜர் பூமியிலே விழுந்து வணங்கினர்.

மிகவும் மனம் நெகிழ்ந்த பெரியநம்பிகளும், ஸ்ரீ ராமானுஜரை அருட்கூர்ந்து பக்கத்திலே அணைத்துக்கொண்டு, பரந்தசோலை சூழ்ந்த அரங்கமாநகரை விட்டு விட்டு, உயர்ந்த பரமபதத்தை அடைந்த அரிய பெரிய ஞானியான ஆளவந்தாரின் திருவடியை மனமகிழ்ச்சியோடு, பற்றுவீராக என மொழிந்து, முன்பே, பகவத் சம்பந்தத்தை முழுமையாக பெற்றவராகிய ஸ்ரீ இராமானுஜருக்கு, அந்த முகூர்த்தத்திலேயே பஞ்ச ஸம்ஸ்காரத்தை செய்ய முற்பட்டார்.

ஸ்ரீ ராமானுஜரும், குளத்தில் நீராடி, ஸ்ரீ வைஷ்ணவர்களுடன் திருக்கோயில் அடைந்தார்.

ஸ்ரீ ராமபிரான் சந்நிதியில் ஹோமாக்னியில் காச்சியங்கு, சக்கரங்களை கொண்டு எல்லா லட்சணங்களும் பொருந்திய ஸ்ரீராமானுஜர் திருத்தோள்களில் பொதிந்து, மந்திரம், தாசநாமம், அர்ச்சாரூப தேவபெருமாள், முதலியவைகளை அளித்து ஸ்ரீராமானுஜரிடம் ''இளையாழ்வாரே தமக்கு இப்போது உபதேசிப்பது ஆளவந்தார் என கருதிக் கொள்ளும்'' என மிகவும் மன மகிழ்ந்து நெகிழ்ந்து உரைத்தார் பெரியநம்பிகள். ஆயிரம் கால தவம் பலித்ததாக பரவசமுற்றார் இராமானுஜர்.

இந்த அனுபவ பேரின்பம் வாய்த்தது கருதியே திருவரங்கத்தமுதனார் தம்முடைய ''இராமானுஜ நூற்று அந்தாதியில் எதிகளுக்கு இறைவன் யமுனத்துறைவன் இணையடியாம் கதி பெற்றுடைய இராமானுஜர்'' என துதித்து மகிழ்ந்தார்

**பஞ்ச ஸம்ஸ்காரம் என்பது**

1. இரண்டு தோள்களிலும் சங்கு சக்கர முத்திரை பதித்தல்

2. உடம்பில் பன்னிரெண்டு இடங்களில் ''கேசவநாராயண மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுசூதன, திருவிக்ரம, வாமந, ஸ்ரீதர, ஹ்ருஷிகேச, பத்மநாப, தாமோதர'' என்ற நாமங்களைச் சொல்லி திருமண் சாப்பிடல்.

3. திருவாராதனை முறை உரைத்தல்

4. தாச நாமம் அளித்தல்.

5. திரு எட்டு எழுத்து (கடவல்லி உபநிடதத்திலுள்ள திவ்யம் என்கிற மந்திரம் மற்றும் வராகபுராணம், ராமாயணம், பகவத்கீதா சரம ஸ்லோகங்களை உபதேசித்தல் என்பதாகும்.

பெரியநம்பிகளால் பஞ்ச ஸம்ஸ்காரம் என்ற பெரிய பாக்கியத்தை பெற்ற ஸ்ரீராமானுஜர் மாலை தோன்றும் வளர்மதி போல் பிரகாசிக்க தொடங்கினார்.


ஸ்ரீ ராமானுஜர் ஆச்சாரியராக பெரியநம்பிகளிடம், ''பிரமாணம், பிரமேயம், பிரமாதா இவற்றை விளக்கி கூறவேண்டும் படி கேட்டுக் கொண்டார்.

பெரிய நம்பிகளும் மனம் மகிழ்ந்து'' வேதமே பிரமாணம் என்று வேதத்தின் பயனாகிய மோட்சத்தின் வித்தினை வளரச் செய்யும் சூரியனாகவும் இருப்பவனாகிய ஸ்ரீமந்நாராயணனே பிரமேயம் என்றும், பிரமாணம், பிரமேயம் இரண்டையும் விளக்கும் ஆச்சாரியனாக இருப்பவரே பிரமாதா என்றும் '' ஸ்ரீராமானுஜருக்கு குறைவில்லாத பெருமையுடைய வேதங்களின் உட்பொருள் விளக்கினர்.

ஸ்ரீராமானுஜரும் பெரியநம்பிகளின் விளக்கம் கேட்டு, கண்களில் கண்ணீர் தாரை தாரையாக சொரிய மயர் கூச்செரிய, பேரின்ப நிலை அடைந்தார்.

பின்னர் பெரியநம்பி, அவர்தம் தர்மபத்தினியும் ஸ்ரீராமானுஜருடன் ஸ்ரீ காஞ்சிபுரம் வந்தனர், ஸ்ரீராமானுஜர் தன் திருமாளிகையில் அவர்களுக்கு இடங்கொடுத்து, பணிந்து, நாள்தோறும் வடமொழி மறைகளையும், திராவிட வேதமான திவ்ய ப்ரபந்தங்களையும், கற்றுவந்தார். திருகச்சிநம்பிகளையும் காஞ்சி பேரருளாளனையும் மறவாமல் வணங்கி மகிழ்வோடு வாழ்ந்து வந்தார்கள்.

# செந்தமிழ் வளர்த்த சிவத்திரு ஞானியார்



பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து வாழ்ந்து தமிழ் வளர்த்த நல்லோர் பலருள் திருப் பாதிரிப்புலியூர் சிவத்திரு ஞானியார் அடிகள் தனிச் சிறப்புப் பெற்றவர் தமிழையும் சைவத் தையும் தம் இரு கண்களாக கொண்ட அவர்கள் தமிழோ, துலங்கும் சிவவடிவோ எனத் தமிழ் கூறு நல்லுலகம் போற்றத் திகழ்ந்தவர்.

தமிழ் மொழி பலராலும் போற்றப்படாமல் இருந்த காலம் அது. ஆங்கில மொழிப் பயிற்சி பரவலாக இருந்ததால் தமிழர்களே தமிழைப் புறக்கணித்தனர். தமிழில் பேச வராது எனக் கூறுவதைக் கற்றோர்கள் கண்ணியமாக கருதினர்.

இப்படி தமிழ் மொழி தமிழர்களாலேயே சீர்குலைந்து போவதைக் கண்டு மனம் நொந்த அடிகள் அதை மாற்றி அமைக்க வழி தேடி பாடுபட்ட முதல் மடாதிபதியாக தமிழகத்திற்கு அறிமுகமானவர் தான் ஞானியார்.

கும்பகோணத்திற்கு வடகிழக்கே ராகு தலம் எனப் பெயர் பெற்ற திருநாகேஸ்வரத்தில் வீர சைவ மரபில் அண்ணாமலையார் - பார்வதியம்மை தம்பதியருக்குப் பிறந்த பழநியாண்டி என்ற பெயர் கொண்ட குழந்தை குடும்பத் தொடர்புடைய திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் ஆறு மாதக் குழந்தையாக வளர்ந்து 17ம் வயதில் மடாலய குரு பீடத்தில் குரு மகா சந்நிதான மாக அமரும் புண்ணியத்தைப் பெற்றது.

பிறரைத் திருத்த முற்படுவதைக் காட்டிலும் தாமே முன்னர் திருந்திப் பிறருக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இவர் மடாலயத்தை நோக்கி மக்கள் வந்து போனதை மாற்றி, மக்களை நோக்கி தாமே சென்று தமிழ் பணி செய்ய முற்பட்ட துணிச்சல் தான் தந்தை பெரியார், திரு.வி.க., மறைமலையடிகள் போன்றோரைக் கவர்ந்தது.

வாழ்ந்த தமிழ் வீழ்ந்து கிடக்கிறதே, இதை எழுந்திருக்க செய்வார் யார் என ஏங்கியபோது பாலைவனத்தில் பால் வார்த்தார்போல பாலவனத்தம் குறுநில மன்னர் பாண்டித் துரைத் தேவர் தம்மைக் காண வந்தபோது தமிழ் வளர்த்த மதுரையில் மீண்டும் ஒரு தமிழ்

---

**-தமிழாகரர் தெ.முருகசாமி.**

சங்கம் நிறுவ வேண்டும். அதன் மூலம் நாட்டு மக்களிடம் தமிழை பரப்பச் செய்ய வேண்டும் என தம் விருப்பத்தை அடிகள் வேண்டுகோளாகக் கூறியருள, அவரும் தம் உடன்பிறந்த ராமநாதபுர மன்னர் பாஸ்கர சேதுபதியும் சேர்ந்து மதுரையில் அடிகளைக் கொண்டே நான்காம் தமிழ் சங்கத்தை தோற்றுவித்தனர். அச்சங்கத்தின் வளர்ச்சி பிற்காலத்தில் ஏட்டுச் சுவடிகளை பதிப்பித்தல், தமிழ் கல்லூரி உருவாக்கம் போன்றவற்றுக்கு அடிப்படையாக இருந்தது.

படிப்பு என்றால் அந்நாளில் அரசாங்க வேலைக்குச் செல்வதாக சில வகுப்பு வரை படித்தால் போதும் என்ற நிலை இருந்தது. திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஓரளவு கல்வி அறிவைப் புகட்டினாலும், அரசின் ஆதரவு இல்லா நிலை தான் இருந்தது. இதனால் ஆங்கில வழிக் கல்வி பரவியதையும், தமிழ் வழிக் கல்வி புறக்கணிக்கப்பட்டதையும் கண்டு கவலையுற்ற அடிகள் அரசு ஆதரவுடன் தமிழ்க் கல்வியைப் பரப்ப உறுதி பூண்டார்.

திருவையாற்றில் அப்போது இருந்த வடமொழிக் கல்வியின் கல்லூரி அமைப்பை பற்றி ஆராயத் தொடங்கி வழக்கறிஞர்கள் தா.வே.உமாமகேஸ்வரம் பிள்ளை, ஏ.டி.பன்னீர் செல்வம் ஆகியோரின் உதவியை நாடினார். இதனால் தஞ்சை மாவட்டக் கழக அறக்கட்டளையால் நடக்கும் கல்லூரி வடமொழிக்கு மட்டுமின்றி பொதுவாக கல்விக்குரியது என தெரிந்து கொண்டு அம் முயற்சியால் அங்கு தமிழும் பயிலுவதற்கான ஏற்பாட்டைச் செய்தார். வடமொழிக் கல்லூரி அரசர் கல்லூரி என்ற பொதுப் பெயரில் மாற்றம் அடைந்ததோடு தமிழும் பயில்வதற்குரியதான ஆக்கம் காணச் செய்த பெருமை ஞானியார் அடிகளையே சாரும். இச்சிறிய தொண்டால் மடாலயத்திற்குள்ளே இருந்து சமயம் பரப்ப வேண்டியது மட்டுமே மடாலயத் தொண்டன்று என்பதை முதன் முதலில் நாட்டுக்கு உணர்த்தியதால் தான் திருப்பாதிரிப்புலியூர் என்றதும் சிவத்திரு ஞானியார் அடிகளை நினைவு கூறும் அளவிற்கு அடிகள் அனைவராலும் பாராட்டப் பெற்றார்.

இதனால் ஞானியாரின் தமிழ்த் தொண்டு காட்டுத் தீ போல் எங்கும் பரவியது. தமிழகத்தின் பல பகுதிகளில் தமிழ் வளர்ச்சிக் கென சங்கங்கள், தமிழ்க் கல்லூரிகள் தோன்றின இவற்றில் கரந்தை தமிழ் சங்கம், கரந்தை புலவர் கல்லூரி, மயிலம் சிவஞானபாலையர் சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்பன குறிப்பிடத் தக்கவையாகும். தமிழோடு சைவ நெறி காக்கும் பொருட்டு மறைமலையடிகள் செயலராக கொண்டு சைவ சித்தாந்த மகா சமாஜம் ஒன்றைத் திருமடத்தில் தொடங்கினார். வடக்கே ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் போல சைவ சமாஜம் தொடங்கப் பெற்றது. அடிகளின் செயல் திறனால் வளர்ந்த சமாஜத்தில் பா.வே.மாணிக்க நாயக்கர், திரு.வி.க., போன்றோர் தொடர்பு கொண்டார்கள். சமாஜத்தின் சார்பில் சித்தாந்தம் என்ற மாத இதழ் வெளிவரவும், திருமுறைகள், பெரிய புராணம், சாத்திரங்கள் முதலியன அடக்க விலையில் செம்பதிப்பாக வெளியிடவும் அடிகள் காரணமாக இருந்தார். சமாஜத்தின் மூலம் ஆங்காங்கே கிளைகள் தொடங்கப்பட்டு சொற்பொழிவுகளும் மாநாடுகளும் நடந்தன.

சமாஜத்தால் சைவம் வீறுகொண்டு எழுந்தது எனலாம்.

தமிழின் மேன்மையைத் தமிழர் அறியுமாறு செய்யும் தொண்டை மேற்கொண்ட அடிகள், ஊர் ஊராக தாமே சென்று தமிழ் வளர்த்தார். அப்போது அடிகளுக்கு இருந்த செல்வாக்கால் தனிக் காரில் பயணம் செய்ய முடியும். ஆனால், அதை தவிர்த்து பல்லக்கில் செல்வதையே விரும்பினார். ஒரு நாளைக்கு பத்து மைல் தூரம் பயணம் செய்ததும் அங்கே தங்கி மக்களைக் கூட்டி சொற்பொழிவு செய்வார். இதனால் காலக்கழிவு நேரிடுவதைப் பற்றி திரு.வி.க., போன்றோர் கூறியபோதும் காரில் பயணிப்பதை விரும்பவில்லை. பல்லக்கில் ஊர்ந்து செல்வதால் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாட்டு அன்பர்கள் அடிகளின் பேச்சைக் கேட்க கொடுத்து வைக்காததற்காக வருந்தியதும் உண்டு.

திருமடத்தில் இருக்கும்போது தினமும் பாடம் நடத்துவார்; சொற்பொழிவு செய்வார், பிறரை சொற்பொழி ஆற்றச் செய்து பயிற்சி கொடுப்பார். மடாலயத்தில் பயில்வோருக்கும் மதிய உணவு வழங்கினார். அப்பழுக்கற்ற

நிலையில், தமிழ், தமிழர் நிலை உயர பாடுபடுவதை ஒரு மடாலயத் தலைவர் செய்கிறார் என்பதை கேட்டறிந்த பெரியார் ஞானியாருடன் தொடர்பு கொண்டார். அடிகளைக் கொண்டே குடியரசு இதழைத் தொடங்கினார்.

ஞானியாரின் சிவத் தொண்டில் திருப்பாதிரிப் புலியூர் திருக்கோயில் அறங்காவலர் தலைவராக இருந்து தொண்டாற்றியது குறிப்பிடத்தகுந்த சான்றாகும். செட்டிநாட்டைச் சேர்ந்த கடியாப்பட்டி வள்ளல் தீ.சொ.விலாசத்தாரின் பெருஞ்செல்வத் துணையால் திருக்கோயிலுக்கு மின் விளக்கு அமைக்கப்பட்டது. நாள் வழிபாடு, விழாக்கால வழிபாடு முதலியன திருமுறைகளோடு நடக்க வழிவகை செய்யப்பட்டன. கோயில் கணக்குகள் அன்றாடம் எழுதி முடித்து விட வேண்டும் போன்ற சீர்த்திருத்தங்கள் உருவாயின. மடாதிபதிகளாக இருப்போர் தம் மடாலய கடமைகளை ஆற்றுவர். அதேபோல் ஞானியார் இருந்தாலும் அன்றாடம் தமிழையும், சைவத்தையும் போதித்து ஆசானாகவும் இருந்தது ஞானியாருக்கு தனிப் புகழை ஈட்டித் தந்தது. இதற்கெல்லாம் அவர் இளமையிலேயே (17 வயதில்) துறவு பூண்ட நிலையில் 15 ஆண்டு காலம் மடாலயத்திலேயே தங்கி தமிழ், தெலுங்கு, வடமொழி, ஆங்கிலம் போன்றவற்றை தனித் தனி ஆசிரியர்களைக் கொண்டு கசடற கற்றதே காரணமாகும்.

அடிகள் வீர சைவ துறவியானாலும் சமயக் காழ்ப்பின்றி கிறித்துவர், இஸ்லாமியர், சமணர் போன்றோருக்கு பாடம் நடத்தினார். கிறித்துவர்களின் பெண் துறவியர், இவரிடம் சைவ சித்தாந்தப் பாடம் கேட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சைவத்தைப் போலவே வைணவத்திலும் ஆழங்கால்பட்டு பேசும் திறத்தால் அடிகளின் தமிழ்ச் சுவை தனியானது என கல்கி ரா.கி., அடிகளின் பேச்சைக் கேட்டு பழகியதால் புகழ்ந்துள்ளார்.

சமய காழ்ப்பில்லாததை போல அடிகள் ஜாதி, பேதம் பாராட்டதவராகவும் திகழ்ந்தார். செல்லும் இடமெல்லாம் மனித குல ஒற்றுமை பற்றியும், தீண்டாமை பாவம் என்பது பற்றியும், தீய மதுபானப் பழக்கத்தை விட்டொழிக்கவும் சொற்பொழிவில் அழுத்தமாக கூறுவார். சிதம்பரத்தில் சிறந்த சமூகத் தொண்டாற்றி வந்த அரிஜன வகுப்பைச் சேர்ந்த சுவாமி சகஜானந்தர் என்பவரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரை மடாலயத்திற்கு வரவழைத்து பாராட்டினார்.

தமக்கு கல்வி புகட்டிய ஆசிரியரிடம் கொண்ட பக்தி சிறப்பானது. தமிழ் கல்வி தந்த மு.சுவாமிநாதய்யர் இயற்கை எய்தியதைக் கேட்டறிந்து வருந்திய அடிகள், அவரது பெயரை மடாலய நூலகத்திற்கு வைத்ததோடு வறுமையில் வாடிய அவரது குடும்பத்துக்கு பல உதவிகளைத் தொடர்ந்து செய்தார்.

காலமெல்லாம் அடிகள் சைவத்தையும், தமிழையும் பரப்பும் பணியாகவே ஆங்காங்கு சென்று வந்ததால் எழுத்துப் பணியில் அதிக கவனம் செலுத்தவில்லை. இருப்பினும், அவர்களுக்கு கால் முறிவு ஏற்பட்டபோது தம் ஆதீன குரு முதல்வரை வேண்டி குரு துதி என்பதாக வெண்பாவாலான நூலை இயற்றினார் மேலும் ஞானதேசிக மாலை, திலகவதியார் அம்மைத் துதி என்ற இரண்டு



நல்லாற்றூர் – துறைமங்கலம்
கற்பனைக் களஞ்சியம்
ஸ்ரீ சிவப்பிரகாசர்.

சிறு சிறு நூல்களையும் அருளினார்.

அடிகளுக்கு எல்லா இலக்கண இலக்கியங்களிலும் நிரம்பிய புலமை இருந்தாலும், கற்பனை களஞ்சியம் **நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள்** இலக்கியங்களில் தனி ஈடுபாடுடையவராக இருந்தார். சிவப்பிரகாசரின் மேற்கோள் இல்லாமல் சொற்பொழிவுகள் இல்லை. ஒருமுறை திருச்சியில் நடந்த தமிழ்ப் பேரவையில் திருக்குறள் பயிலப்பட்ட இலக்கியங்கள் பற்றிய அறிஞர் பலரின் பேச்சுக்குப் பின்னர் இனி குறள் பற்றிய புதிய இலக்கியச் செய்தி இல்லை என்று அனைவரும் எண்ணுமாறு இருந்தநிலையில் ஞானியார் முடிவுரையில் திருக்குறளின் ஈறடிகள் மாதொருபாகனுக்குச் சிவப்பிரகாசர் உவமையாக கூறியுள்ளார் என்ற புதுச்செய்தியை சொன்னதும் அறிஞர்கள் எல்லாம் ஞானியார் ஞானியார் தான் என்றும் கற்றோருக்குத் தாம் வரம்பாகிய தலைவர் ஞானியார் தான் என்றும் கூறிப் புகழ்ந்தார்களாம்.

இப்படி நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தராகத் திகழ்ந்த அடிகள் அதிசயம் அநேகமுற்ற பழநியம்பதிக்கு சென்றபோது 1942 தைப்பூசத்தன்று பழநி சாது சாமிகள் திருமடத்தில் சிவராஜ யோகம் பற்றிச் சொற்பொழிவாற்றி விட்டு ஊர் திரும்புகையில் பழநி எல்லையில் பரிபூரணம் அடைந்தார் என்ற செய்தி அனைவரையும் உலுக்கியது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் வானில் ஞான சூரியனாக விளங்கிய ஞானியாரின் ஞானத் தமிழ் ஞாலம் அளந்த ஒண்தீந்தமிழ் எனலாம்.

## கபிலர்

கபிலர் கடைச்சங்க காலத்து சங்கப் புலவர்களில் சங்கத் தலைமை தாங்கிய நக்கீரருக்கு அடுத்து எண்ணப்படும் அருந்தமிழ்ப் புலவர்.

'பரண கபிலரும் வாழி' என்று நக்கீரராலேயே பாராட்டப் பெற்றவர்.

ஒருவாத புகழமைந்த திருவாதவூரில் பிறந்த அந்தணாளர்.

நோக்கு என்னும் சிறப்பமைந்த பாக்கள் இயற்றுவதில் இவர்க்கு நிகராவார் எவருமில்லை என்று இவரது ஆசிரியரே இவரைப் புகழும் அளவில் பெரும்புலவர்.

இவர் எழுதிய குறிஞ்சிப் பாட்டுக்கு ஈடு இணை எதுவும் இல்லை என்று புலவர்கள் இவரைப் போற்றுகின்றனர். தமிழை இகழ்ந்த ஆரிய மன்னன் ஆகிய பிரகதத்தன் என்பானுக்கு தமிழே உலகிலுள்ள மொழிகளில் தொன்மையும் பெருமையும் வாய்ந்தது என உணர்த்தி அவனுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தவர். இவரது குறிஞ்சிப்பாட்டைக் கற்று அதிலுள்ள இயற்கை அழகுகளும், நீதி முதலியவும் உள்ளத்தைக் கவர ஆரிய மன்னன் பிரகதத்தன் தமிழை இடையறாது பயின்று நல்லிசைப் புலவனாகும்படி செய்தவர் கபிலர். இவர் கடையெழு வள்ளல்களில் ஒருவனான பாரியின் இனிய நண்பர்.

பாரி மகளிர் இருவர்க்கு பாரி இறந்தபின் பலரொடும் சூழ்ந்து முயன்று திருமுடிக்காரி என்ற மன்னனுக்கு அவர்களை மணம் முடித்து வைத்தவர்.

இவர் பெண்ணையாற்றின் நடுவில் திருக்கோவிலூரில் வடக்கிலிருந்து மூலக்கனலை மூட்டி எழுப்பித் துறக்கம் என்னும் சொர்க்கத்தை அடைந்ததாக வரலாறு கூறுகிறது. இதற்கு வரலாற்றுச் சான்றாக கபிலர்கல் என்பது இன்னும் அப்பகுதியில் காணப்படுகிறது.

கபிலம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு செந்நிறம் என்ற பொருள் உண்டு. அதனால் இச்சொல் சிவபெருமானைக் குறித்த பெயராகும்.

எனவே கபிலர் என்றது கடவுட் பெயராகும். பரிபாடல் உருத்திரரை பதினொரு கபிலர் என்பது இதனை உறுதிப்படுத்துகிறது.

இந்தக் கபிலரும் வடமொழி சாங்கிய நூலை எழுதிய கபிலரும் வேறு. திருமுறைப் புலவர் ஒருவர் சிவபெருமான் அந்தாதி எழுதி உள்ளார். அவர் வேறு, சங்ககாலத்துக் கபிலர் வேறு.

இவர் எழுதியவற்றுள் ஒன்று 'கபிலர் அகவல்' என்ற அகவல் உள்ளது. பிறப்பினால் சாதி வருவதில்லை என்பது இதில் ஆணித்தரமாக உரைக்கப்பட்டிருக்கிறது. சிறப்பும் சீலமும் அல்லது பிறப்பு நலந்தராதென்று இந்த அகவல் கூறுவது சிந்தனைக்கு உரியது.

இவர் எழுதிய நீதி நூல் ஒன்று உண்டு. 'இன்னா நாற்பது' என்ற இந்நூல் சிறுவர்கள் சிறிய வயதில் படிக்க வேண்டியதொரு நூல்.

**- நன்றி: தெய்வ முரசு இதழ்**

# அருள்மிகு கூடலழகர்



**2. தல புராணம்:** நான்முகக் கடவுளான பிரம்மாவின் மைந்தரான சனத்குமாரன் தேவ சிற்பியான விசுவகர்மாவின் துணை கொண்டு கிருதமாலை நதிக்கரையில் அஷ்டாங்க விமானத்தை நிர்மாணம் செய்தார். அதனுள் கூடலழகர், திருமகள், நிலமகளோடு எழுந்தருள்கின்றார். திருநீலகண்டனான சிவபெருமான் உமா தேவியைக் கூடுவதற்காக இவ்விமானத்தின் தென்கிழக்கு திசையில் உள்ள பொற்றாமரைக் குளக்கரையில் கடுந்தவம் புரிந்தார். சிவபெருமானின் தவத்தை மெச்சிய கூடலழகர், சப்த ரிஷிகள் வேதம் ஓத திருமணம் நிகழத் துணை நின்றார்.

ஒருசமயம் பிருகு சக்கரவர்த்தி தெய்வீக விமானத்தில் விண்ணில் பவனிவரும் பொழுது அஷ்டாங்க விமானத்தின் மேல் ஊர்தியின் நிழல்பட்டதும் ஊர்தி தரையிறங்கியது. சக்கரவர்த்தி அஷ்டாங்க விமானத்தையும் எம்பெருமானையும் வழிபட பெருமிதம் அடைந்தார். அம்பரீட மன்னன், புருரவச் சக்கரவர்த்தி, மலயத்துவஜ பாண்டியன் போன்ற மன்னர்கள் வழிபட்ட தலம் ஆகும்.

**1. அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை:** தலத்தின் பெயர் - கூடல் மாநகர்

தலத்தின் இதர பெயர்கள் - இருந்தையூர், மதுரை, நான்மாடக்கூடல். கூடல் மாநகர், திருப்பல்லாண்டு தீர்த்தம் - கிருதமாலா நதி, ஹேமபுஷ்கரணி (பொற்குளம்) இருப்பிடம் - மதுரை மாநகர் தொடர் வண்டி நிலையத்திலிருந்து கிழக்காக 1 கி.மீ., தொலைவிலும், பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கிழக்காக 0.5 கி.மீ., தொலைவிலும் அமைந்துள்ளது. மூலவர் திருநாமம் - ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீகூடலழகர் பெருமாள். உற்சவர் ; ஸ்ரீதேவி பூதேவி சமேத வியூகசுந்தரராஜப் பெருமாள். தாயார் திருநாமம் - ஸ்ரீ மதுரவல்லித் தாயார் ஸ்தல விருட்சம் - கடம்ப மரம், கதலிவன க்ஷேத்திரம்

**3. தல வரலாறு:** சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பண்டைப் பெரும் பதியாகிய மதுரை மாநகரில் கோயில் கொண்டிருப்பவரே அருள்மிகு கூடலழகர், கூடல் என்பது

தமிழ்ச்சங்கத்தில் வீற்றிருந்த புலவர்களின் கூடலழகைக் குறிக்கும் எனவே மதுரை மாநகருக்கு கூடல் எனும் பெயர் வந்தது. அங்கு வீற்றிருந்த புலவர்களின் கூடலால் ஆகும். சங்கப் புலவர்களின் கூடலில் துவரைக் கோமான்(துவாரகை மன்னன்) என்ற பெயருடன் திருமால் புலவராக வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்த பெருமை கருதிக் கூடல் அழகர் என போற்றப் பெறுகிறார்.

இப்பெருமான் "இருந்தையூர் அமர்ந்த செல்வ" என்று பரிபாடலிலும், அடியார்க்கு நல்லார் எனும் புலவரால் "அந்தரவாணத் தெம்பெருமான்" என்றும் குறிக்கப் பட்டுள்ளார். தலையாளங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கூடலழகருக்கு ஆவணித் திருவோணத் திருவிழா நடத்தியதாக மதுரைக்காஞ்சி கூறுகிறது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் நீடுநீர்வையை நெடுமால் எனப் போற்றுகின்றார்.



**4. திருப்பல்லாண்டு தோன்றிய திருத்தலம்:** ஸ்ரீவல்லபதேவ் பாண்டியன் ஒரு பொற்கிழியைக் கட்டி பரம்பொருள் யார் என்று கூறுபவர் அதை எடுத்துக் கொள்ளலாம் என அறிவித்தான். ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருந்து பெரியாழ்வாரை அழைத்து வந்து சமயவாதிகள் கூடிய பேரவையில் பரம்பொருள் யார் என அருதியிடச் செய்தனர். பெரியாழ்வார் வேத மந்திரங்களை ஆதாரமாகக் கொண்டு திருமால் ஒருவனே பரம்பொருள் என உறுதி செய்தார். அவ்வமயம் பொற்கிழி தானாகவே பெரியாழ்வார் திருக்கரத்தில் வந்து சேர்ந்தது. இதைக்கண்ட பாண்டிய மன்னன் மகிழ்வுற்று அவரைப் பாராட்டி பட்டத்து யானை மீது ஏற்றி நகர்வலம் செய்து சிறப்பித்தான் அவ்வமயம் மெய்காட்டுப்பொட்டல் என்ற இடத்தில் பெருமாள் ஸ்ரீகூடலழகர் ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் கருட வாகனத்தில் ஆழ்வாருக்குக் காட்சியளித்தார்.

இதைக் கண்டுகளித்த பெரியாழ்வார் எம்பெருமானின் அழகைக் கண்டு

கண்ணெச்சில் (திருஷ்டி) வந்து விடக் கூடாது என்று எண்ணி, யானையின் மணிகளையே தாளமாகக் கொண்டு திருப்பல்லாண்டு பாடியருளினார். ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்துக்கு நாலாயிர திவ்யப்பிரபந்தம் மிகவும் முக்கியமானது. இந்த நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் திருப்பல்லாண்டு மிகவும் முக்கியமானது. ஸ்ரீஇராமானுஜர் இத்தலத்திற்கு வருகை புரிந்தபொழுது திருப்பல்லாண்டு விளைந்த திவ்யதேசம் என்ற பெயரிட்டுப் போற்றியுள்ளார்.

**5. அஷ்டாங்க விமானம்:** எட்டு அங்கங்கள் மற்றும் மூன்று நிலை நிலைகளைக் கொண்டு உயர்ந்து நிற்கும் இந்த ஆலயத்தின் அஷ்டாங்க விமானம் ஓம் நமோ நாராயணாய என்ற திருஎட்டெழுத்து மந்திரத்தின் வடிவமாகும். அடித்தளத்தில் (கற்பக் கிரஹம்) ஸ்ரீகூடலழகர் அமர்ந்த திருக்கோலத்திலும், இரண்டாவது அடுக்கில் நின்ற திருக்கோலத்தில் சூர்யநாராயணராகவும், மூன்றாவது தளத்தில் சயனக் கோலத்தில் சீராப்திநாதனாகவும் பாற்கடலில் பள்ளி கொண்ட கோலத்திலும் மூன்று நிலைகளில் ஒரே இடத்தில் காட்சி தருவது சிறப்பான ஒன்றாகும். மேல்தளங்கள் இரண்டிலும் மிகப் பழமையான மூலிகை வர்ணங்கள் அழகு செய்விக்கின்றன. இவ்விமானத்தின் கலச நிழல் தரையில் வீழ்வதில்லை.


**நினைத்ததை நடத்தி வைக்கும் விமானம்**

இவ்விமானத்தை நாள் 1க்கு கொடிமரத்தை

மையமாக வைத்து பன்னிரண்டு முறை தொடர்ந்து 48 நாட்கள் (ஒரு மண்டலம்) வலம் வந்தால் நினைத்த காரியங்கள் கைகூடும். ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் 108 பிரகாரம் வலம் வரும் நிகழ்ச்சி பக்தர்களால் இன்றும் நடைபெற்று வருகிறது.

**6. கல்வெட்டுச் செய்தி:** கி.பி.1542 முதல் 1570-ல் வசவண நாயக்கர் - திம்மப்ப நாயக்கர் காலத்தில் செய்த திருப்பணிகள் மற்றும் திருக்கோயிலுக்கு விடப்பட்ட மானிய கிராமங்கள், நிலங்கள் மற்றும் வீடுகள் பற்றிய செய்திகளைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

**7. திருவிழாக்கள்:** தமிழ் வருடம் வைகாசி மாதம் அனுஷ நட்சத்திரத்தை ஒட்டி பதினான்கு நாட்கள் பிரம்மோற்சவமும் (தேர்த் திருவிழா), மாசி மாதம் மக நட்சத்திரத்தை யொட்டி, தெப்பத் திருவிழா பன்னிரண்டு நாட்களும் பெருந்திருவிழாக்களாக நடைபெற்று வருகின்றன. வைகுண்ட ஏகாதசி, புரட்டாசி சனி வாரங்கள் மிகச் சிறப்பான நாட்களாகும். புரட்டாசி பௌர்ணமி அன்று ஐந்து கெருட சேவை நடைபெற்று வருகிறது.



**8.நிர்வாகம்:** இத்திருக்கோயில் தமிழக அரசு அறநிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்டது. உதவி ஆணையர் / செயல் அலுவலர் அவர்களாலும் அறங்காவலர் குழுவாலும் நிர்வாகம் நடைபெற்று வருகின்றது.

**9. திவ்யதேசம்:** இத்திருக்கோயில் வைணவத் திருத்தலங்கள் 108ல் 47வது திருத்தலமாக திகழ்கிறது. பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் இரண்டாவதாகும். திருமங்கை யாழ் வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற தலமாகும். நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தில் பெரிய திருமொழியில் 9ம் பத்தில் 2ல் 5வது பாசுரமாகும்.

**10. திருக்கோயிலின் நித்திய பூஜை காலங்கள் விவரம்:** நடை திறப்பு : காலை 5.30 மணி. விஸ்வரூபம் : காலை 6.00 மணி. காலசந்தி : காலை 8 மணி. உபசந்தி : காலை 10.00 மணி. உச்சிக்காலம் : மதியம் 12.00 மணி (சனிக்கிழமை 12.30 மணி.) சாயரட்சை : மாலை 5 மணி.உபசந்தி : மாலை 7.00 மணி. அர்த்தஜாமம் : இரவு 9.00 மணி (சனிக்கிழமை 10.00 மணி)

**11. நவக்கிரஹ சன்னதி:** வைணவத் தலங்கள் திவ்யதேசங்களில் நவக்கிரஹ சன்னதி எழுந்தருளியிருக்கும் திவ்யதேசம் இத்திருக்கோயிலே ஆகும். இத்திருக்கோயிலில் சோதிட சாஸ்திர முறைப்படி நவக்கிரஹ பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பக்தர்கள் நவக்கிரஹங்களை வழிபட்டு நற்பலன்களை அடைந்து வருகின்றனர்.

**12. சூர்யரதம்:** இத்திருக்கோயிலின் நிர்வாக அதிகாரி அறைக்கு அருகில் சூரிய பகவான் சூரிய மண்டலத்தில் ரதத்தில் பிரவேசிக்கும் வடிவத்தில் ஒரு கற்சிற்பம் காணப்படுவது மிகச் சிறந்த ஒன்றாகும்.

**13பிரதான சன்னதிகள்:** 1.அருள்மிகு மதுரவல்லித் தாயார் சன்னதி.

ஸ்ரீகூடலழகர் சன்னதிக்கு வலப்புறம் அருள்மிகு மதுரவல்லித் தாயார் சன்னதி உள்ளது. இங்கு தாயார் பத்மாசனத்தில் வீற்றிருந்த திருக்கோலத்தில் மதுரவல்லித் தாயார் என்ற திருநாமத்துடன் நான்கு திருக்கரங்களுடன் காட்சி தருகிறார். தாயாருக்கு வெளிப்புறப்பாடு கிடையாது. பிரதி வாரம் வெள்ளிக் கிழமை தோறும் தாயாருக்கு அபிஷேகத்துடன் இரவு புறப்பாடு ஆனபின் ஊஞ்சல் சேவை நடைபெற்று வருகிறது.

2.ஸ்ரீசுதர்சன நரசிம்ம சன்னதி



(ஸ்ரீசக்கரத்தாழ்வார் சன்னதி)

தாயார் சன்னதிக்கு இடப்புறம் முன்பாக ஸ்ரீசுதர்சன நரசிம்ம சன்னதி உள்ளது. இங்கு ஸ்ரீ சுதர்சன ஆழ்வார் பதினாறு திருக்கரத்துடன் நின்ற கோலத்துடனும் பின்புறம் யோகநரசிம்மரும் கொண்ட திருமேனியாக மூலவர் உற்சவர் காட்சி தருகிறார்.

**3.ஆண்டாள் சன்னதி.** ஸ்ரீகூடழலகர் சன்னதிக்கு இடப்புறம் நந்தவனத்துடன் கூடிய ஸ்ரீஆண்டாள் சன்னதி உள்ளது. இங்கு ஆண்டாள் நின்ற திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார். ஸ்ரீஆண்டாளுக்கு திருவாடிப்பூர உற்சவம் பத்து நாட்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

**4.உபசன்னதிகள்:** மகாமண்டபத்தில் விஷ்வக்சேனர் சன்னதி, ராமர் சன்னதி, கிருஷ்ணர் சன்னதி, லெட்சுமி நாராயணர் சன்னதி, ஸ்ரீகெருடாழ்வார் சன்னதி, ஸ்ரீஆஞ்சநேயர் சன்னதி, ஆழ்வார், ஆச்சாரியர் உற்சவர் மற்றும் மூலவர் சன்னதி, ஸ்ரீலெட்சுமி நரசிம்மர் சன்னதி, மணவாள மாமுனிகள் சன்னதி ஆகியன உள்ளன.

**"கோழியும் கூடலும் கோயில் கொண்ட**
**கோவலரே ஒப்பர் குன்ற மன்ன**
**பாழியந் தோளும் ஓர் நான்குடையர்**
**பண்டுஇவர் தம்மையும் கண்டறியோம்**
**வாழியரோ இவர் வண்ணம் எண்ணில்**
**மாகடல் போன்றுளர் கையில்**
**வெய்ய**
**ஆழியொன்றேந்தியோர் சங்கு பற்றி**
**அச்சோ ஒருவர் அழகிய வா!"**

**- திருமங்கையாழ்வார்.**
**பெரிய திருமொழி 9-2-5**



---


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } த. பிச்சாண்டி. இ.ஆ.ப., சிறப்பு ஆணையர்
இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – **600 034.**
தொலைபேசி எண்: **28334811/12/13**

ஆசிரியர் (கூடுபொ) ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்


அச்சிடுவோர் குணசுந்தரி மாடர்ன் ஆர்ட்பிரிண்டர்ஸ், சென்னை – 21
தொலைபேசி : **25967929/**






10.07.2008 அன்று நடைபெற்ற சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலின் திருக்குளத் திருப்பணித் துவக்க விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப. அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு. த.பிச்சாண்டி, இ.ஆ.ப. அவர்கள், சென்னை மாநகராட்சி ஆணையர், திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப. அவர்கள், தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ராஜா அவர்கள் மற்றும் பல முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.







சுந்தரமூர்த்திநாயனாரால் பாடல்பெற்ற, முதலை உண்ட மதலையை மீட்ட அற்புதம் நிகழ்ந்த பழமையான திருத்தலமான, கோவை மாவட்டம், அவிநாசிவட்டம், அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயிலில் 14.7.2008 அன்று குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு ஊரகத்தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் ந. பழனிச்சாமி அவர்கள், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





29.7.2008 அன்று கோவை, காரமடை, அருள்மிகு அரங்கநாதபெருமாள் திருக்கோயிலில் ரூ.86.50 லட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் இராஜகோபுரம் திருப்பணியினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் மற்றும் அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு. த.பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினர்.



பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08

## தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்

(இந்து சமய அறநிலையத்துறை ஆளுமைக்குட்பட்டது)

# புன்னை நல்லூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

## ஆவணி பிரம்மோத்ஸவ அழைப்பிதழ் - பசலி - 1418

மெய்யன்புடையீர், வணக்கம்

தண்ணீரும் காவிரியே! தார்வேந்தன் சோழனே! மண்ணாவது சோழமண்டலமே எனப் போற்றப்படும் சோழ வளநாட்டுத் தலைநகராம் இஞ்சிசூழ் தஞ்சைக்குக் கீழ்பால் 5.கி.மீ. தொலைவில் புன்னைநல்லூரில் வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளிப்பவளும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாய் விளங்கி அருள்புரியும் மாரியம்மன் திருக்கோவிலின் 1418- ஆம் பசலி ஆவணி பிரம்மோத்ஸவம் நாளது திருவள்ளுவர் ஆண்டு 2039 ஆடி மாதம் 23-ஆம் தேதி (07.08.2008) வியாழக்கிழமை சித்திரை நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை 7.30 மணிக்குமேல் 9.00 மணிக்குள் பந்தல்கால் முகூர்த்தமும், ஆடி மாத 31-ம் தேதி (15.08.2008) வெள்ளிக்கிழமை உத்திராட நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள் கன்யா லக்னத்தில் கொடி ஏற்றமும், ஆடி மாதம் 26-ஆம் தேதி (10.08.2008) ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணிக்கு முத்துப்பல்லக்கும், அதனைத்தொடர்ந்து நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபடி சுவாமி புறப்பாடுகளும் நடைபெறும். ஆவணி மாதம் 29-ம் தேதி (14.09.2008) கடைசி ஞாயிறு அன்று மதியம் 3.00 மணிக்கு மேல் திருத்தேர் வடம் பிடித்தலும் நடைபெறவுள்ளது அது சமயம் பக்தகோடிகள் அனைவரும் வந்திருந்து பங்குகொண்டு தரிசனம் செய்து மாரியம்மனின் அருளைப்பெற்று இம்மையிலும் மறுமையிலும் நீங்காத செல்வம் பெற்றுப் பெருவாழ்வு பெற அன்புடன் அழைக்கிறோம்.

**வே. கோவிந்தராம்.எம்.ஏ.பி.எல்.,**
உதவி ஆணையர்

**இராஜ. ஸ்ரீ சி.பாபாஜி ராஜா பான்ஸ்லே.பி.இ.**
பரம்பரை அறங்காவலர்

மற்றும் தேவஸ்தானப் பணியாளர்கள்

திருவள்ளுவர் ஆண்டு 2039 திருவிழாக்களின் கால அட்டவணை

| தேதி | | கிழமை | விபரம் | காலை | மாலை |
|---|---|---|---|---|---|
| 07.08.2008 | ஆடி23 | வியாழன் | பந்தக்கால் முகூர்த்தம் | 7.00 மணிக்குமேல் 9.00 மணிக்குள் | |
| 10.08.2008 | ஆடி26 | ஞாயிறு | முத்துப்பல்லக்கு விழா | | 7.00 மணிக்குமேல் |
| 14.08.2008 | ஆடி30 | வியாழன் | அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை வாஸ்து சாந்தி, அங்குரார்பணம் மிருத்ஸங்கிரஹணம் | | 7.00 மணிக்குமேல் 9.00 மணிக்குள் |
| 15.08.2008 | ஆடி31 | வெள்ளி | துவஜாரோகணம் | 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள் | |
| 17.08.2008 | ஆவணி 1 | ஞாயிறு | ஆவணி முதல் வாரம் | படிச்சட்டம் | சிம்ம வாகனம் |
| 24.08.2008 | ஆவணி 8 | ஞாயிறு | ஆவணி இரண்டாம் வாரம் | படிச்சட்டம் | ஹம்ஸ வாகனம் |
| 31.08.2008 | ஆவணி 15 | ஞாயிறு | ஆவணி மூன்றாம் வாரம் | படிச்சட்டம் | சிம்ம வாகனம் |
| 06.09.2008 | ஆவணி 21 | சனி | முதல் நாள் பெரிய காப்பு | | அன்ன வாகனம் 7.00. 8.00 |
| 07.09.2008 | ஆவணி 22 | ஞாயிறு | ஆவணி நான்காம் வாரம் இரண்டாம் திருநாள் | படிச்சட்டம் | சேர்வை பல்லக்கு |
| 08.09.2008 | ஆவணி 23 | திங்கள் | மூன்றாம் திருநாள் | படிச்சட்டம் | சிம்ம வாகனம் |
| 09.09.2008 | ஆவணி 24 | செவ்வாய் | நான்காம் திருநாள் | படிச்சட்டம் | பூதகவாகனம் |
| 10.09.2008 | ஆவணி 25 | புதன் | ஐந்தாம் திருநாள் | படிச்சட்டம் | வெள்ளி ரிஷப வாகனம் |
| 11.09.2008 | ஆவணி 26 | வியாழன் | ஆறாம் திருநாள் | படிச்சட்டம் | யானை வாகனம் |
| 12.09.2008 | ஆவணி 27 | வெள்ளி | ஏழாம் திருநாள் | படிச்சட்டம் | சேஷ வாகனம் |
| 13.09.2008 | ஆவணி 28 | சனி | எட்டாம் திருநாள் | படிச்சட்டம் | குதிரை வாகனம் |
| 14.09.2008 | ஆவணி 29 | ஞாயிறு | ஆவணி ஐந்தாம் வாரம் திருத்தேர் வடம் பிடித்தல் | | 3.00 - 4.30 மணிக்குள் |
| 15.09.2008 | ஆவணி 30 | திங்கள் | பத்தாம் திருநாள் -துவஜாவரோஹணம் | | ரிஷப வாகனம் தீர்த்தவாரி, மஞ்சள் நீராட்டு |
| 21.09.2008 | புரட்டாசி 05 | ஞாயிறு | தெப்பத் திருவிழா | | 7. மணிக்கு மேல் |